www.tamilarangam.net

Vol.2;Nr.6;June 1995 Sarvadesa Tamiler: ISSN.0805-7443

**Norway Tamil magazine to co-ordinate the Tamils for advancement & solidarity**

# சர்வதேசதமிழர்


தமிழர்களை முன்னேற்றம்,ஐக்கியம் கருதி ஒன்றிணைக்கும் நோர்வே தமிழ்ச்சஞ்சிகை



ட்நாமியர் 'த்றை' பொன் சிவா



ஒஸ்லோ விஜிலண்ட் பார்க்





ரி.ஆர்.கள்ளபிரான்

உள்ளே:

சவுதிஅரேபியாவில் தமிழகமீனவரின் அவலம் !.............சவுதிக்கடிதம்.
வியட்நாமியருடன் ஒரு சுவையானபேட்டி ! .....................பொன்.சிவா-ஏகசுண்ட்.
அறிஞர் தடாகத்தில் திரட்டிய முத்துக்கள்!.....................டாக்டர்.சச்சி சிறீகாந்தா-ஜப்பான்.
வங்கி உயரதிகாரி திரு.கள்ளபிரானுடன் பேட்டி!............பி.சத்தியநாராயணன்,கல்கத்தா.
மலையகக்கடிதம்..........................................................மாத்தளை அருள்பிரகாஷ்
பனிப்பூக்கள்/பாகுபாடு...................................................காரையூரான் இ.தியாகலிங்கம்.
மாஸ்கோவில் எனது மறக்கமுடியாத அனுபவங்கள்!.....ஆரையம்பதி.க.சபாரத்தினம்.
சிறுகதை: சமஉரிமை...................................................திருச்செல்வம் திலீபன்-ஒஸ்லோ.
புதியதோர் உலகம் செய்வோம்.......................................கே.எஸ்.ஆர்.-மட்டக்களப்பு.
சர்வதேச தமிழர் கவியரங்கம்/தகவல்சேவை/வாசகர் களம்/சிந்தனைத்தடாகம்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கௌரவ சர்வதேச இணைப்பாளர்கள்:
நோர்வே:ஒஸ்லோ:தி.திலீபன்.22.166733;கு.பாலதாஸ் 22.206327பேர்கன்:என்.ஜெயதரன்.ஜ.றோயலா துரொண்கைம்:த.தியாகலிங்கம்
ஸ்ரவங்கர்:அ.பாஸ்கரன்:முபாரக் அலி கிறிஸ்ரியன்சான்ட்:ம.பஸ்ரியன்ஏககுண்ட்:பொன்.சிவா;துறம்சோ:கே.சிவராஜா; வார்டோ:
இ.தியாகலிங்கம்;பேர்லவோக்:இரா.விஜய்;போட்ஸ்பியுட்:க.சுரேஷ்கரன் கார்மோய்:பா.பாலேந்திரன்;பிறத்வோக்:எஸ்.தங்கராஜா

## வாசகர் களம்/Readers' Forum

**அன்பான ஆசிரியநண்ப!**
'சர்வதேச தமிழர்' இதழ்கள் கிடைக்கப்பெற்றமைக்கு என் இதயபூர்வமான வாழ்த்துக்கள்!
வெளிநாடு வந்தவர்களில் எல்லாராலும் இவ்விதமான பணிகள் செய்துவிட முடியாது.அதற்கு மனமும் வேண்டும் அந்தவகையில் நீங்கள் செய்யும்பணி மகத்தானது!வாழ்க!! தங்களுக்கு 'ஈழகேசரி' தொடர்ந்துஅனுப்பப்படும். நட்பை மறவாத நினைவுகளுடன்,
E.K.Rajagopal-Editor,' Eelakesari '
38,Moffat road,London SW17 7EZ
Tel.181.7678004 FX.181.7677866
( 'ஈழகேசரி'யுடன் 'சர்வதேசதமிழர் ' நட்புறவு,ஒத்துழைப்பு,மாற்றீடு மேற்கொள்ளும்.இனியநண்பருக்கு எம் ஆழமான நன்றி!பாராட்டுக்கள்-ஆ.ர்)

**அன்புள்ள ஆசிரியநண்பரே!**
நம் 'சர்வதேச தமிழர்' நண்பர்களும், தாங்களும் நலம்பெறவாழ்த்துகிறேன் ஜித்தாவில் வாழும் தமிழர்கட்காக என்அழைப்பை ஏற்று'சர்வதேச தமிழரை'தொடர்ந்து அனுப்புவதற்கு நன்றி!இவ்விதழால் உலகெங்கும் நம்தமிழ்முரசு கொட்டட்டும்.விரைவில் நம் ஆக்கங்களும் அனுப்பி,தமிழ்வளர்க்க உதவுவோம்! என்றும் பிரியமுடன்,
**எஸ்.காளிதாஸ்.........சவுதிஅரேபியா**

**அன்புள்ள ஆசிரியருக்கு!**
'சர்வதேச தமிழர்' பங்குனி இதழில் வந்த காரையூரானின் கலாசாரச்சீரழிவு பற்றிய கட்டுரை தொடர்பாக மதுரை இரா.இரவி எழுதிய கடிதத்துக்கு பதில்தரவிரும்புகிறேன்.
அக்கட்டுரையை நண்பர் தவறாகப் புரிந்துள்ளார் என்றே தோன்றுகிறது. 'தாலி'என்பது இக்காலத்தில் மிகவும் அவசியமானதொன்று!பெண்ணினத்துக்கு வேலியாய் அமைவதே அந்தத் தாலியின் தனிச்சிறப்பு!காளையரின் பார்வையிலிருந்து காப்பது தாலியே! முன்னாள் காதலி எனினும்,அவள் கழுத்தில் தாலி ஏறியபின்,ஆணின் பார்வையில் கண்ணியம் பிறந்துவிடுகிறது!இதுவும் தாலியின் மகிமையே! மங்களகரமான மஞ்சள்கயிற்றில் மாங்கல்யம் தொடுத்து,ஆகமவிதிப்படி அணிவதே தாலியின் சிறப்பு! காரையூரான் மேன்மேலும் கலாசாரச் சீரழிவு பற்றி எழுதவேண்டும்!
**முகமது கவுஸ் - குவைத்**

**அன்புள்ள ஆசிரியருக்கு!**
ஒரு தமிழ்உணர்வாளனின் அன்புக் கடிதம் இது! 'சிந்தனையாளன்'பத்திரிகையில் 'சர்வதேச தமிழர்'பற்றி அறிந்தமையால் தொடர்புறுகிறேன்! நான் தமிழ்நாடு மார்க்சிய-லெனினி சக்கட்சியில் உறுப்பினராகவுள்ளேன். இக்கட்சியின் நோக்கம், 'தமிழ்தேச விடுதலைப்புரட்சி'என்பது தான்! இதனை அடையும் வகையில் பலவேறு வடிவங்களில் இயக்கங்களைக்கட்டியும்,செயல்படுத்தியும்,விரிவுபடுத்தியும் வருகிறோம்!பல்வேறு சித்தாந்த;அரசியல் பத்திரிகைகளையும் வெளியிட்டு வருகிறோம்.கீழ்க்கண்ட முழக்கங்களை மக்கள் மத்தியில் பரப்புகிறோம்!
'டெல்லியில் இருப்பது தரகு-பார்ப்பானிய வல்லாண்மைஅரசு!
சென்னையில் இருப்பது டெல்லியின் எடுபிடி அடிமை அரசு!
தமிழ்நாட்டிற்கு வேண்டும், தமிழ்தேசியபுரட்சி அரசு! '
ஆனால் இன்றிருக்கும் திராவிடக் கட்சிகளோ,டெல்லியோடு சமரசம் செய்துகொள்கிற,காட்டிக்கொடுக்கிற கட்சிகளாய் இருக்கின்றன.இக்கட்சிகளுக்குப்பின்னால் தான் பெரும்பான்மையான மக்கள் அணி!திரட்டப்பட்டுள்ளனர்.எனவே இக்கட்சிகளை அம்பலப்படுத்துவதும்;தமிழ்உணர்வாளர்களை ஒன்றிணைப்பதும்;தமிழ்ப் பண்பாட்டியலுக்கு எதிராயுள்ள பார்ப்பனீய பண்பாடு உட்பட அனைத்துவகை பண்பாட்டியல்களை எதிர்த்து, அம்பலப்படுத்துவதும்;தனித்தமிழ் இயக்கப்பணிகளை ஆதரிப்பதும் தான்.தமிழ்சமூகமாற்றத்தை விரும்பக்கூடிய ஒவ்வொரு தமிழனின் கடமையாக இருக்கமுடியும்.இதுவல்லாத பிறபணிகள் பயனற்றவையாகவே இருக்கும் என்பது என்கருத்து! இதுபற்றி வாசகர்களின் கருத்துக்கள் அறியஆவல்!இந்த முயற்சியில் உலகத்தமிழர்களை கரம் இணையுங்கள்!என அன்பாக வேண்டுகின்றேன்!
**தோழர் மணி-தர்மபுரி , தமிழ்நாடு.**

**அன்பின் ஆசிரியர்க்கு,**
'சர்வதேச தமிழர்' வானளாவ உயர்ந்தோங்க வாழ்த்துகிறோம்!
'காலம் பிறந்ததும்,உண்மைதான்!
உண்மைதான்!!
'சர்வதேசத்தமிழர்'உயர்வதும்
என்றுந்தான்!என்றுந்தான்!!
**சு.தங்கராசா.....பிறத்வோக்,நோர்வே**

## சவுதியில் தமிழகமீனவர் அவலம் !

தமிழ்நாட்டின் கன்னியாகுமரி,இராமநாதபுரம் மாவட்டங்களில் இருந்து, சவுதி அரேபியாவில் பிழைப்புக்காக கடற்தொழில் செய்ய வந்த தமிழர்களின் நிலை,இரக்கமற்ற அரபு முதலாளிகளால் மிகமோசமான நிலையை அடைந்துள்ளதை, 'சர்வதேச தமிழர் ' மூலம் தெரிவிக்கவிரும்புகிறோம்!
ஜுபைல்,தரின்,சியாத் போன்ற சவுதிக்கரையோரங்களில் தமிழகத்திலிருந்து அழைத்துவரப்பட்ட மீனவர்கள் அதிகமாக மீன்பிடித்தொழிலில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.இந்தியாவிலிருந்து விமானத்தில் வந்து இறங்கியதுமே,பாஸ்போர்ட்டைக் கையில் வாங்கும் சவுதிமுதலாளி,நேராக மீனவர்களை விசைப்படகில் ஏற்றிவிடுகிறான்! அன்று தொடங்கும் கடல்வாழ்க்கை, தாயகம் திரும்பும்வரை படகிலேதான் என இரக்கமற்ற சவுதிவாழ்வாகிறது! 7 நாட்கள் வரை கடலில் இருந்து மீன்பிடித்துவிட்டு வரும் மீனவர்கட்கு இரக்கமற்ற அரபுமுதலாளி கரையில் தங்குமிடவசதிகூடத் தருவதில்லை. கடும்வெய்யிலில் கடற்காற்று மீனவர்க்கு சாதகமாயிருப்பதில்லை!பயங்கரக்குளிரானகாலத்தில் படகின் யந்திர வெப்பம் மீனவருக்கு போதாது!கரை வந்து சேர்ந்தால் நண்பர்களைப்பார்த்துப்பேசவோ,மற்ற இடங்களுக்கு செல்லவோ முதலாளி அனுமதிக்காக காத்துக்கிடக்க வேண்டும்.
முதல்தர அடிமையாக யந்திரத்துடன் யந்திரமான இந்த அவலவாழ்வை பணம் கருதி,மனம் வெதும்பிவாழ்கின்றனர்.எனினும் பணம்கூட லாபத்தின் 30வீதம் மட்டும் தொழிலாளர் பங்கிட கிடைக்கிறது.சிலமுதலாளிகள் இந்த சிறியதொகையைக்கூட கொடுக்காமல் ஏமாற்றிவிடுகின்றனர். ஆயிரக்கணக்கில் ஒரேஇடத்தில் தொழில் செய்து கொண்டிருக்கும் தமிழர்களிடையே ஒற்றுமையின்மை சவுதிக்காரனுக்கு சாதகமாகவுள்ளது. ஒப்பந்தத்தை முதலில் கிழித்துப்போடும் முதலாளி,பணம்தராமல் ஏமாற்றி ஊருக்கு அனுப்பிவிடுகிறான்,அல்லது ஊருக்கு அனுப்பாமலும்,தொழிலுக்கு அனுப்பாமலும் திண்டாடவிடுகிறான்.இதற்கு விடிவுகாண யாரை,எப்படி அணுகுவதென ஆலோசனைகள், வழிமுறைகள்,முகவரிகள் தந்துதவுக!
**சவுதியில் துன்புறும் தமிழகமீனவர்**
(I.L.O./Geneva க்கு முறையிட்டுஅனுப்பப்படுகிறது!தமிழர் ஒற்றுமை பேணுக ஆ-ர்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிரிட்டன்:டாக்டர்.செ.ஆனந்தவரதன் 181.905.0995;ந.பாலமுரளி181.4729336;திருமதி.த.மனோகரன்:மு.ஆறுமுகம் 181.5432126
கனடா:பா.சிவலிங்கம்416.4497607;ரி.எஸ்.மூர்த்தி:416.4675723;இந்தியா: சென்னை:பேராசிரியர்.வ.மாசிலாமணி/ அண்ணா பல்கலைக்கழகம்/44.2351723-3161; பேராசிரியர்.ஐ.இராமச்சந்திரன்/ஐ.ஐ.ரி.2351365/3094 ;திருச்சி:பேராசிரியர்கே.செல்லப்பா -



## ஆசிரியர் கருத்து:Editorial

### தமிழர்களும் இந்தியாவும்!

தமிழர்களின் புராதன தாயகம் இந்தியா என்பதும்,இந்தியாவின் புராதனக் குடிகள் தமிழர்கள் என்பதும் யாவரும் அறிந்த விடயம்!தமிழர்கள் கைபர் கணவாய் ஊடாக மத்தியஆசியாவிலிருந்து இந்தியாவுக்கு குடிபெயர்ந்தவர்களல்லர்!இந்தியாவின் மிகப்பழமையும்,இலக்கியசெழுமையும் மிக்க மொழி தமிழ்! என்று அறிஞர்களும், ஆய்வாளர்களும் விளக்கியுள்ளனர். ஆனால் இன்றைய தமிழ்,தமிழர் நிலை கவலைக்கிடமாகவே இந்தியாவில் இருக்கிறது.

தமிழ்மொழியின் நாளாந்தபயன்பாடு ஆங்கிலம் என்ற மொழியின் ஆதிக்கத்தில் சிக்கிச்சீரழிகிறது.சாதாரண பேச்சுவழக்கிலும்,பத்திரிகைத்துறை, சினிமாவிலும் ஆங்கிலம் கலப்பது ஒரு நாகரீகமாகவே வந்துவிட்டமை, கவலை அளிப்பது!அந்தநிலையை தமிழர் மாற்ற முயற்சிக்கவேண்டும். தமிழகத்திலிருந்து வரும் சஞ்சிகைகள் இவ்விடயத்தில் மிகமிக அவதானம் காட்டல் அவசியம். விஞ்ஞான, தொழில்நுட்ப பதங்கள் சிலஅப்படியே பாவிப்பதில் தவறில்லை.அன்றேல் பொருத்தமான,சிக்கலற்ற,குழப்பமற்ற தமிழ்ச்சொற்கள் பாவிக்கப்படலாம்.

தமிழர்நிலை இன்றைய இந்தியாவில் அரசியல்,சமூக,பொருளாதார,கல்வி,தொழில்துறையில் தாழ்ந்தே இருப்பது கண்கூடு!இந்நிலை விரைவில் மாறவேண்டும்.எப்படி மாற்றுவது என்பதற்கு தமிழர்களே வழிகாணவேண்டும்.திராவிடநாடு கோரிக்கையை முன்வைத்த அறிஞர் அண்ணா முழுஇந்தியாவுக்கும் எதிரிகளிடமிருந்து பாதுகாப்பு வேண்டி ஒற்றுமையை ஏற்றுக்கொண்டார்.

இந்தியாவை பிரதமராக தலைமையேற்று வழிநடத்தும் தகுதிபெற தமிழர்கள் தம்முள்ஒற்றுமை, பிற சிறுபான்மையருடன் நட்புறவு,பன்மொழிப்புலமை,அரசியல்சாணக்கியம்,உழைப்பு,நேர்மை,சுயநலமற்றதன்மை,திறமை,விடாமுயற்சி ஆகியவற்றின் துணைகொண்டு ஜனநாயகமரபுக்குட்பட்டு போராடுவதில் தவறில்லை. 'வறுமை,அறியாமை,துன்பம் இவற்றிலிருந்து விடுதலை' நோக்காகலாம்.

## சிந்தனைத்தடாகம் Think Tank

### ரோமானிமக்கள்(நாடோடி/Gypsies)

ஆயிரம் வருடங்கட்கு முன்னர் வட இந்தியமாநிலமான பஞ்சாபிலிருந்து மேற்குநோக்கி கௌகாசஸ்,பால்கன் இடங்கட்கு குடிபெயர்ந்தனர்.ஜிதான், ஜிதானோ,சிகான்,சிகொயினர்,ஓங்கனோய்,அல்லது தீண்டத்தகாதவர் என ஐரோப்பா எங்கும் அழைக்கப்பட்டனர்.ரோமானியாவில் பண்ணைத்தொழிலாளராக அடிமைவேலை,செய்தனர்.1850ல் அடிமைமுறை ஒழிந்தது. பால்கனிலிருந்து சிலர் வர்த்தகம் செய்ய மத்தியஐரோப்பாவுள் புகுந்தனர்.சிலர் சங்கீதம் பாடவும்,சிலர் நகைவிற்கவும்,பூவிற்கவும்,குதிரைவிற்கவும்,கரடி வித்தைகாட்டுபவராகவும்,மாற சிலர் நிரந்தரநாடோடிகளாயும்,சிலர் நிரந்தரவாசிகளாயும் மாறினர். !940-45ல் ஹிட்லரின் கையால் பல மிலியன் பேர் செத்தனர்.இன்று 10-12 மிலியன் ரோமானிமக்கள் ஐரோப்பா எங்கும் கஸ்டவாழ்வு வாழ்கின்றனர். ஆடலும்,பாடலும்,எண்ணைதேய்த்து முழுகலும்,இந்தியஇசைபோன்ற பாடல்களை ரசிப்பதும் இவர்கள் அம்சம்.

வேடர்:இலங்கையின் மத்திய,கிழக்கு பகுதி அடர்ந்த பயங்கரகாடுகளில் பழமைவாய்ந்த இனமான வேடர் வாழ்கிறார்கள்.அவர்கள் வாழ்க்கைமுறை ஆயிரக்கணக்கான ஆண்டுகள் பழைமைவாய்ந்தது.புத்தகுருமாரால் எழுதப்பட்ட 'மகாவம்சம்' இவர்கள் பூர்விகம் பற்றி ஓரளவு கூறுகிறது. முதலாவது அரசனான விஜயன்,சிங்கத்துக்கும் ஒருஇளவரசிக்கும் பிறந்தவர்களின் வாரிசு என்றும்,அவனது முதல்மனைவியும்,பிறந்தபிள்ளைகளும் துரத்தப்பட்டு மலைகளில் அகதிகளாக குடியேறி,வந்தவாரிசுகள் தான் வேடர் என்றும் கூறுகிறது.
இது கற்பனைக்கதையாக இருக்கலாம்.ஆனால்கி.மு.2000ஆண்டுகட்கு முன் வடஇந்தியாவுள் படையெடுத்த ஆரியர்களால் துரத்தப்பட்டு,இந்தப்பிரதேசத்துள் இவர்கள் தஞ்சம்புகுந்திருக்கலாம் என கருதப்படுகிறது. இன்று வேடர்கள் இலங்கை சனத்துள் உறிஞ்சப்பட்டு அவர்கள் பாசையையும் பேசுகின்றனர்.1911 ல் 5300 பேர் இருப்பதாக புள்ளிவிபரம் கூறினும்,1964ல் இலங்கை அரசு அவர்கள் சனத்தொகை 800 என விபரம்தந்தது.
-Tell me the answers/Encyclopedia

இனப்பிரச்சனை தென்ஆபிரிக்காவில் பாரதுாரமாகவும்,கடினமானதாயும் உள்ளது.இந்தியரால் இதுமேலும் குழப்பம் அடைந்துள்ளது.4லட்சம் இந்தியர் வாக்குரிமை இன்றி உள்ளனர். இவர்கள் சிலபிரதேசங்களுக்குள் வர முடியாது.இவர்கட்கு எதிர்ப்புநிறைய உண்டு.இந்தியா இவர்கட்கு ஆதரவு அளிக்கிறது.இலவசமாக நாடுதிரும்ப,பணம்தர,அவர்கள் அதை ஏற்க மறுத்துவிட்டனர்.இவர்கள் புத்திசாலிகள்:முன்னேற்றகரமானவர்கள்.கறுப்பினபாகுபாட்டால் இவர்கள் குடிவரவு குறைக்கப்பட்டு,ஐரோப்பியர்குடிவரவு கூட்டப்பட்டுள்ளது.
கிறிஸ்தவ மிசனரிமார் கறுப்பின மக்களின் இயல்பான வாழ்க்கைமுறையை உடைத்துமாற்றி,வெள்ளையரின் பொருளியத்தன்மை,வாழ்க்கைமுறை ,பண்பாட்டை புகுத்துகின்றனர்.வெள்ளையர் நல்லநிலங்களை எடுத்துவிட்டு கறுப்பரை ஒதுக்கிடங்கட்கு அனுப்புகின்றனர்.வெள்ளைமனிதர் வைத்ததுதான் சட்டமும்,ஒழுங்கும்!வருணச்சண்டை,அடிமைவேட்டை கறுப்பர்களைப் பாதிக்கிறது.
வெள்ளையருடன் இந்தியரே போட்டி போடுகிறார்கள்.கரும்புச்செய்கைக் காகக்கூட்டிவரப்பட்ட இவர்கள் படிப்பும்,பொருளாதாரசக்தியும் உள்ளவர்களாக உள்ளனர்.
-பூமி எமது உலகம்/1956 நோர்வே கலைக்களஞ்சியத்திலிருந்து.

### ஒரு முரண்பாட்டு சூழ்நிலையில் (conflict ) நீங்கள் எப்படி நடப்பீர்கள்?

தத்தம் ஆளுமை,முரண்பாட்டின் முக்கியத்துவம்,அத்துடனானதொடர்பு,முரண்பாட்டுக்குரிய விடயம் என்பதைப்பொறுத்து மனிதரை 5வகையாகப்பிரிக்கிறார் அமெரிக்கஉளவியலாளர் ஜே.ஜோன்சன்.

1. கரடிபோல முரண்பாடு தவிர்த்து நழுவிச்செல்லல்.
2. ஆமைகால்களை உள்ளிழுத்துக் கொள்வதுபோல் பேச்சற்றுஇருத்தல்.
3. ஆந்தை போல ஒரு தீர்வுக்கு முடிவு வேண்டி முரண்பாட்டுக்கு தயார்.
4. சுறாபோல் பலம் பாவித்து தன் நலனையே பாதுகாத்தல்;அடக்குமுறை
5. நரி போல விட்டுக்கொடுத்து சமாளித்து ஒத்துப்போதல்.

மற்றவர்களுடனான தொடர்பா? நோக்கத்துடனான தொடர்பா?முக்கியம் என்பது மனிதர் வகைக்கேற்ப மாறுபடும் (உளவியல் நூலிலிருந்து)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாரதிதாசன் பல்கலைக்கழகம்:பேராசிரியர் இரா.இரகுபதி/பிசப் ஈபர் கல்லூரி மதுரை:இரா.இரவி புதுச்சேரி:ச.வேல்முருகன்
கல்கத்தா: பி.சத்யநாராயணன்;டெல்லி:இரா.ஜெயசேதுபதி;;கதிர்.சம்பத்குமார் கேரளா: பேராசிரியர் கே ஏ.ராஜாராம்;
ச.வெள்ளிங்கிரி;கைதராபாத்: என்.ஆர்.லட்சுமணன்; ரஷ்யா/மாஸ்கோ: க.சபாரத்தினம்; இ.வளர்மதி சவுதிஅராபியா/ அல்.கதிவ்:

## வியட்நாமியருடன் ஒரு சுவையானபேட்டி!

பொன்.சிவா-ஏகசுண்ட்,நோர்வே

'க்வார்னர் ' என்னும் பாரிய பெற்றோலிய எண்ணை சுத்திகரிப்புத்தாங்கிகளை உருவாக்கும் நோர்வே தொழிற்சாலையில் என்னுடன் வேலைசெய்யும் பல வெளிநாட்டவருள் வியட்நாமியரும் உள்ளனர்.அவர்களில் 'த்றை ' என்பவரை அவர்கள் நாடு,கலாசாரம் பற்றி நான் கண்ட சுவையானபேட்டி இது!

கேள்வி:உங்கள் நாட்டைப்பற்றியும், கலாசாரம் பற்றியும் அறிய ஆவலாக உள்ளேன்.உங்கள்நாட்டு யுத்தம் பற்றி முதலில் கூறுங்களேன்?

பதில்:தென்கிழக்காசியாவில் கம்பூச்சியா,லாவோஸ்,சீனா,தென்சீனக்கடலை எல்லைகளாகக்கொண்ட நாடு! தலைநகர் ஹனோய்;அடுத்த பிரபல நகரம் ஹோசிமின் நகர்(சைகோன்). பரப்பளவு 128,052 ச.மைல்.

1940 ம்ஆண்டு தொடக்கம்,1975ம் ஆண்டு வரை சுமார் 35வருடங்கள் இந்த யுத்தம் நீடித்தது.பல லட்சக் கணக்கான மக்கள் இறந்தனர். அதோடு இப்போது பிறக்கும் குழந்தைகள் கூட பலர் இறந்தும்,அங்கவீனர்களாயும் பிறக்கின்றனர்.

கேள்வி:அந்தயுத்தம் வர என்ன காரணம்?

பதில்:அரசியலதான் காரணம்! அதோடு வெளிநாட்டு சக்திகளின் ஊடுருவலும் ஒரு காரணம்! யுத்தகாலத்தில் அமெரிக்கா தென்வியட்நாமுக்கு இராணுவ,ஆயுத உதவிகளைச்செய்தது.அதேசமயம் சோவியத் யூனியன் வடவியட்நாமுக்கு உதவி செய்தது.இருநாடுகளும் பலகோடி லாபம் சம்பாதித்தனர்.

கேள்வி:உங்கள் நாட்டு சனத்தொகை பற்றி.......?

பதில்:1979ல் சுமார் 53 மிலியனாக இருந்த சனத்தொகை 1987ல் 62.5 மிலியனாக உயர்ந்து ,இன்று 73 மிலியனாக உயர்ந்துள்ளது.சைகோனில் மட்டும் சுமார் 7 மிலியன் சனத்தொகை இன்று உண்டு.

கேள்வி:உங்கள் நாட்டு மதங்கள் பற்றிக்கூறுங்கள்.....!

பதில்:இருபிரதான மதங்கள் உண்டு புத்தம்(1986ல் 34.5மிலியன்) , கத்தோலிக்கம்(1986ல் 4.3 மிலியன்;ஏனையோர் பிறசமயம்;சமயம்சாராதோர்) சீனா எமதுநாட்டை 1000 வருடங்கட்கு மேலாக ஆண்டது.அதனால் புத்த சமயம் பரவியது. பிரான்ஸ் 100 வருடங்கட்கு மேலாக எம்மை ஆண்டது.அதனால் கத்தோலிக்க சமயம் இங்கு பரவியது.


கேள்வி:உங்கள் நாட்டு உணவு வகை, உணவு முறை பற்றி..........?

பதில்:சோறுதான் எமது தேசிய உணவு! ஒருநாளைக்கு 2 தடவை சோறு உண்போம்!அதோடு காரமும் நிறைய சேர்த்துத்தான் சாப்பிடுவோம்.அநேகமான ஆசியர்களின் உணவு சோறு தானே!

கேள்வி:உங்கள் திருமணங்கள் எப்படி? பெற்றோரின் முடிவா?சுய முடிவா?

பதில்:எமது நாட்டில் அநேகதிருமணங்கள் பெற்றோரால்தான் நிச்சயிக்கப்படுகின்றன.தற்போது அது குறைந்









தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அ.நிக்சன் றியாட்: பி.யோகநாதன் :ஜித்தா:எஸ்.காளிதாஸ் துபாய்: நஜீர் முகமது.ஏ. பாஹ்ரெயின்:அப்துல்கனி; எம்.ஐ.ரபீக் ஓமான்:எம்.குமரேஷ்தாஸ்; சுவீடன்:எம்.என்.பாலாஸ்; பி.ஜெகதீசன்; ஜேர்மனி:பத்மா.ஞானப்பிரகாசம்;421.589128; க.செந்தில்:0230478452;த. புவனேந்திரன்:0230474391; டென்மார்க்:ச.யோகேந்திரம்:வ.க.பரமநாதன்:



து வருகின்றது.பெற்றோர் நிச்சயிப்பது இப்போதும் உண்டு.திருமணத்தின் போது நல்லநாள்,நட்சத்திரம் பார்ப்பது உண்டு.அப்படிப் பார்ப்பதால் மணமக்கள் நீண்டநாட்கள் இணை பிரியாது வாழ்வர் என நம்புகிறோம். ஆனால் மேற்குநாடுகளில் இப்படி இல்லை!எதிர்மாறாய் இருக்கிறது.

கேள்வி:எமதுகலாசாரத்தில் கணவன் இறந்தால் மனைவி வெள்ளைபுடவை அணிதல் போன்று உள்ளது.அப்படி உங்கள் கலாசாரத்திலும் உண்டா?

பதில்:ஆம்!எமது கலாசாரத்திலும் உண்டு.கணவன் இறந்தால் 3நாட்கள் வெள்ளைப்புடவை கட்டிப்,பின்பு 3மாதங்கட்கு நெற்றியில் ஒரு வெள்ளை நிறப்பட்டியைக் கட்டுவர்.

கேள்வி: ஒரு மனிதன் இறந்தால் புதைப்பார்களா? அல்லது எரிப்பரா?

பதில்:புதைப்பது வழக்கம்!எனினும் சைகோனில் இடவசதி இல்லாததால் எரிப்பர்.

கேள்வி:திருமணத்தின்போது சீதனம் பெண் கொடுப்பது உண்டா?

பதில்:இல்லை!ஒருவிதத்தில் ஆண் தான் இங்கு சீதனம் கொடுக்கிறார் எனலாம்.அதாவது மணமகன்தான் முழுச்செலவையும் ஏற்கிறார்.திருமணம் செய்யமுன் அதற்குண்டான பணத்தைச்சேமித்தபின் திருமணம் செய்கிறார்.

கேள்வி:உங்கள் நாட்டுப்பெண்கள் கொடுத்து வைத்தவர்கள்....!

பதில்:ஒருவனைத்திருமணம் செய்து காலம் தோறும் சேவை செய்வதோடு அவன் பெற்றோர்க்கும் உதவுகிறாள். மழலைச்செல்வங்களைப் பெற்று பராமரிக்கிறாள்.இதுவே எம் கலாசாரம்!

கேள்வி:உங்கள் உறவுமுறைகள் எப்படி.....?

பதில்:உறவினர்,நண்பர்களுடன் மிக நெருங்கிப்பழகுவோம்.உதாரணமாக எமது தாய்தந்தையர் தான் எமக்குக் கடவுள்.அவர்கள் தான் எம்மை இந்த உலகில் படைத்துவிட்டார்கள். அவர்களை ஆயுட்காலம் முடியும்வரை,எம்முடனே தங்கவைத்து பராமரிப்பது எம் வழக்கம்.எம்மைப்பெற்றெடுத்து, சிறுவயதிலிருந்தே பேணிப் பாதுகாத்து வளர்த்தவர்களல்லவா?அவர்களால் இயலாத முதுமைப்பருவத்தில் நாம் ஏன் பராமரிக்கக்கூடாது?முடியாது? அவர்களை வயோதிபர் மடத்தில் கொண்டுபோய் விடுவது நல்லதல்ல! எனக்குத்தெரிந்த ஒரு நோர்வேஜியரிடம் அவரது அப்பா,அம்மா பற்றிக் கேட்டபோது,அவர்களை வயோதிபர் மடத்தில் கொண்டுபோய்விட்டுவிட்டோம்.எப்போதாவது நினைவு வரும்போது,பார்த்து வருவோம்,என்றார்.

கே: எப்போது நீங்கள் நோர்வேக்கு வந்தீர்கள்?

பதில்:1979 ஆம் ஆண்டு ஒரு சிறிய வள்ளத்தில் புறப்பட்டு 5 நாட்களாக சீனா அருகில் கடலில் நின்றோம். பின்பு தெய்வாதீனமாக ஒரு நோர்வேஜியக்கப்பல் ஒன்று எம்மை மீட்டது. அவர்கள் எம்மை அழைத்துச்சென்று சிங்கப்பூரில் 3 மாதம் வைத்துப் பராமரித்தார்கள்.பின் பின் விமானமூலம் எம்மை இங்கு அனுப்பிவைத்தனர்.

கேள்வி:நோர்வே பற்றியும்,இந்நாட்டவர்கள் பற்றியும் என்ன கருத்து?

பதில்:மற்றைய ஐரோப்பியருடன் ஒப்பிடுகையில், இந்தநாட்டுமக்கள் மிக அன்பு, மனிதாபிமானம் உள்ளவர்கள். சிலரிடையே இனத்துவேசம் உள்ளது. இந்த நாட்டில் சில விடயங்கள் எனக்குப் பிடிக்கவில்லை.

இந்தநாட்டுக்காலநிலையும்,விலைவாசியும் எனக்குப்பிடிக்காதவை.பனிமழையும்,பனிமலையும் பார்ப்பதற்கு அழகாக இருப்பினும் வெப்பபிரதேசத்திலிருந்து வந்த எமது உடல்நிலைக்கு ஒத்துவரவில்லை.எம் நாட்டு காலநிலையும்,அழகும் தனிச்சிறப்பு! இங்கு விலைவாசி உலகிலேயே அதிகமாக இருப்பதால் சம்பளம் எப்படியோ செலவாகிவிடுகிறது எனக்கூறி தன்பேட்டியை நிறைவுசெய்கிறார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிரான்ஸ்: செ.ஜெயகுமார்:த.தர்மசீலன் 1.43759171; இலங்கை: கொழும்பு: வி.கங்கைவேணியன் 41.684549 விதுரன்;
யாழ்ப்பாணம்:திருமதி.பி.ஹம்சானந்தி; செ.நடராசா மட்டக்களப்பு:கோபி.ரவி;மாத்தளை: எம்.அருள்பிரகாஸ்; தவ.சஜிதரன்
திருகோணமலை:மதுமாரி ,செ.கனகரத்தினம் கண்டி: எஸ் .மயில்வேந்தன்; அட்டன்:பாலா சங்குப்பிள்ளை;

# அறிஞர் தடாகத்தில் திரட்டிய முத்துக்கள் !

## சச்சி சிறீகாந்தா, புக்குரோய்நகர், ஜப்பான்.

நாட்டைவிட்டு நாடு தாண்டும் பயணவசதிகள் இப்போது மிக்க இலகுவாக அமைந்துவிட்டபோதிலும்,அதிகமானோர் தாம்பிறந்த நாட்டிலேயே வாழ்நாள் முழுவதையும் கழித்துவிடுகின்றனர்.பிறநாட்டிற்கு பயணம்செய்து திரும்பியவர்களிடம் புதியதாக ஏதும் அனுபவம் கிடைத்ததா? எனும் விசாரிக்கும் மனப்பான்மை யாவரிடமும் உள்ளது.ஆனால் பயணம் செய்து திரும்பியவர்களும்,தாம் கண்டு கேட்டு அனுபவித்ததை நயமாக யாவர்க்கும் விளங்கும்படி எழுதுவதும்,பேசுவதும் கூட இலகுவான காரியமல்ல! இந்த விவரணங்களைச் சுருக்கமாகக் கருத்தாழமாகக் கூறுபவர்களும் இல்லாமலில்லை.

எனது மனதைக்கவர்ந்த ஓர் ஆக்கம் கவிஞர் கொத்தமங்கலம் சுப்பு,யாழ்ப்பாணத்துக்கு பல்லாண்டுகட்கு முன் வருகை தந்தபின் எழுதிய ஓர் அருமையான கவிதை தான். இக்கவிதையின் கருத்துநயம்,ஓசைச்சுவை,துள்ளல் சந்தம்(rhythmic beat) மற்றும் எளிய சொற்பாவனை யாவும் யாழ்ப்பாணத் தமிழரைப்பற்றி எழுதப்பட்ட கவிதைகளில் இதுதான் 'நம்பர்one' என்று வியக்கும் வகையில் அமைந்திருக்கிறது.கவிஞர் கொத்தமங்கலம் சுப்பு எழுதிய கவிதை இதுதான்!

காணக்கிடைக்காத பண்பையெல்லாம் -யாழ்ப்
பாணத் தமிழரி டையிற் கண்டேன்.
நாணமில் லாமலே சாமியைக்கும்பிட்டு,
நல்ல தமிழ்மொழி பேசக்கண்டேன்.

எழுத்து விதத்திலே பேசுகின்றார்-அவர்
இதயத்தைச்செய்கையில் காட்டுகிறார்.
பழுத்த பழத்தின் இனிப்புச்சிரிப்புண்டு
பலகாரப் புன்சிரிப் பில்லையங்கே!

பாடல் படிக்கிற நேரத்திலே யவர்
பட்சமுடன் தலை யாட்டுகிறார்.
ஆடலும்பாடலும் நடக்கிறநேரத்திலே
ஆனந்தமாகக் கூத்தாடுகிறார்.

தென்னங்கிடுகிலே வேலிகட்டி -அவர்
சின்னஞ்சிறு வீட்டில் வாழ்ந்துக்கிட்டு
எண்ணம் மலை போலே எண்ணுகிறார்
-அவர்
இதயங்கடல் போலே கருணையிலே!

தெய்வத்தமிழ்மறை ஓதிக்கிட்டு -நல்ல
தேனாகத் தேவாரம் பாடிக்கிட்டு,
சைவந்தழைக்க உழைச்சுக்கிட்டு-அவர்
சத்தியப்பாதையில் வாழுகின்றார்.

எல்லோரும் கல்வி உடையவராம்-அவர்
இன்பமுடன் நன்றாய் வாழுகின்றார்.
எல்லோரும் செல்வமுடையவராய் வாழ
ஈசன் அருளினை வேண்டுகின்றேன்!

கொத்தமங்கலம் சுப்பு அவர்கள் இந்நூற்றாண்டுத் தமிழ்இலக்கிய கர்த்தாக்களில் சிறப்பு முத்திரை பதித்த கலைஞர் என்பதை யாவரும் அறிவர்.அவருடைய ஆக்கமான 'தில்லானா மோகனாம்பாள் ' கதை திரைப்படமாகவும் எடுக்கப்பட்டு,தமிழர்களுடைய கலாச்சாரத்தை,மற்றைய இனத்தவர்கட்கும் விளக்கக்கூடிய வகையில் முக்கிய ஒரு பங்களிப்பாக அமைந்ததும் குறிப்பிடத்தக்கது.

# ஒரு வங்கி உயரதிகாரியின் இலக்கியப்பணி !

## பி.சத்தியநாராயணன் கல்கத்தா-இந்தியா

அரசு அலுவலகளில் இருப்பவர்கள், முக்கியமாக வங்கித்துறையில் பணிபுரிபவர்களில் மிகச்சிலரே தமிழ்இலக்கியத்துக்கு அரியசேவை செய்திருக்கிறார்கள்.அந்தவகையில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி தலைமை அலுவலகத்தில் உதவிப் பொதுமேலாளராகப் பணிபுரியும் திரு.ரி.ஆர்.கள்ளபிரான் அவர்களின் இலக்கியசேவை குறிப்பிடத்தக்கது.சென்றமுறை நான் சென்னை வந்தபோது நான் அவரைச் சந்தித்தேன்.உண்மையில் கூறப்போனால் நான் அவரைச்சந்தித்த விதமே விசித்திரமானது.

நெருக்கடி மிகுந்த அண்ணாசாலையில் அம்பாசிடர் காரில் சென்றுகொண்டிருந்தபோது ஒரு லாரி பின்னால் வந்து மோதிவிட்டது. செய்வதறியாமல் தெருவோரம் நின்றிருந்தபோது, இன்னொரு காரில் இருந்து,கோட்டும் சூட்டும் அணிந்து கம்பீரமாக இறங்கி வந்தார்,திரு.கள்ளபிரான் அவர்கள்! அந்த இக்கட்டான நிலையில் உதவிய அவர் தமிழ் பற்றாளர் என்பதை அறிந்து மேலும் மகிழ்வுற்றேன். அவருடன் பின்பு உரையாடியபோது, 'சர்வதேச தமிழர் 'சஞ்சிகையின் நற்பணிபற்றிக்குறிப்பிட்டு,அவரது இலக்கியப்பணி பற்றியும் அறிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது. அதனை 'சர்வதேச தமிழர் ' வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

<u>கேள்வி</u>:வணக்கம்!திரு.கள்ளபிரான் அவர்களே! 'சர்வதேச தமிழர் ' வாசகர்கட்காக தங்களைப்பற்றி சிறிது கூற முடியுமா?

<u>பதில்</u>:நான் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பௌதிகத்துறையில் சிறப்புப்பட்டதாரி!பின்பு எம்.ஏ.முடித்துவிட்டு இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் சுமார் 30 வருடங்கட்கு மேல் பணிபுரிகிறேன்.இலங்கைக்கிளையிலும் சில வருடங்கள் பணிபுரிந்திருக்கிறேன்.

<u>கேள்வி</u>: தங்கள் இலக்கியப்பணி குறித்து.....?

<u>பதில்</u>:தமிழ்மேல் எனக்கு அளவிடமுடியாத காதல்!என் தமிழ்ப்பணி இரண்டு வகைப்படும்.ஒன்று பக்தி இலக்கியம்;மற்றது மேலாண்மை இயல்.

<u>கேள்வி</u>:தாங்கள் எழுதிய புத்தகங்கள் பற்றி.........!

<u>பதில்</u>:நான் தமிழில் பல்வேறு புத்தகங்கள் எழுதி இருந்தாலும் சில ஆண்டுகட்குமுன் வெளியான 'வெற்றிக்கு வழிகாட்டும் மேலாண்மை ' (Book on Management in Tamil) என்ற புத்தகம் பலரின் பாராட்டுப் பெற்றதல்லாமல் தமிழ்நாடுஅரசின் பரிசும் பெற்றது.

<u>கேள்வி</u>:அது பற்றி சற்றுக்கூறுங்கள்!

<u>பதில்</u>:மேனேஜ்மெண்ட் எனும் மேலாண்மை வாழ்வின் வெற்றிக்கு இட்டுச் செல்லும் கலை!நம்வாழ்வின் ஒட்டுமொத்த முன்னேற்றத்துக்கு அடிப்படையான முகாமைவிஞ்ஞானத்தை பற்றித்தமிழில் விளக்கும் அரியநூல்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குவைத்:முகமதுகவுஸ்; வி.எம்.லிங்கன்; சுவிற்சலாந்த்:எஸ்கதிர்காமநாதன்: 41.12724336; இரா. கலாதரன்;
அமெரிக்கா: செ.பாஸ்கரன்; ஜே.ஜோர்ஜ் அவுஸ்திரேலியா:லெ.முருகபூபதி; தென்.ஆபிரிக்கா:திருமதி.கமலா.வேலுப்பிள்ளை;
புருணை: எம்.ஐ.எம்.நகீப் யப்பான்: டாக்டர்.சச்சி ஸ்ரீகாந்தா சிங்கப்பூர்:கு.இரஞ்சகுணாளன்

அனைத்து சக்திகளையும் ஆக்கபூர்வமாகப் பயன்படுத்துவது எப்படி என முக்கியமாக விளக்கியுள்ளேன்.பீட்டர் டிரக்கர் எனும் முகாமைத்துவநிபுணர் கூறிய மேலாண்மைதத்துவங்களை நன்கு அலசி ஆராய்ந்துள்ளேன். மனத்தின் அடித்தளத்தில் உறங்கிக் கிடக்கும் சக்திகளை வெளிக்கொணர்ந்து மனிதவெற்றிக்குப் பயன்படுத்த வைப்பதே இதன் நோக்கம்!

கேள்வி: உங்களுக்கு பிடித்த தமிழ் இலக்கியங்கள்......?

பதில்:நன்னூல்,தொல்காப்பியம்,நாலடியார்,சிலப்பதிகாரம் போன்ற பலநூல்கள் என் மனத்தைக்கவர்ந்திழுத்தாலும்,பக்திஇலக்கியத்துக்கு கம்பராமாயணமும்,அறிவுநூல்களில் திருக்குறளும் ஈடுஇணையற்றவை. அதனால்தான் என் மேற்கண்ட புத்தகத்தில் திருக்குறளில் இருந்து பலவிதமான மேற்கோள்கள் காட்டி விளக்கியுள்ளேன்.மேலாண்மை பற்றி பல மேனாட்டுஅறிஞர்கள் கூறியதைவிட 2000 ஆண்டுகட்கு முன் தமிழ்வேதம் எழுதிய வள்ளுவப்பெருந்தகை மிகச்சிறப்பாகக் கூறியிருக்கிறார். அவர் கருத்துக்களை சிறந்தமுறையில் கையாண்டிருப்பதை இப்புத்தகத்தைப்படித்த பலர் பாராட்டியுள்ளனர். திருக்குறளை தற்போது ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கும் பணியில் ஈடுபட்டுள்ளேன்.

கேள்வி:'சர்வதேசதமிழர்' வாசகர்கட்கு தாங்கள் கூறவிரும்புவது........?

பதில்:நார்வேயிலிருந்து தமிழர் ஒற்றுமை,தமிழ்மொழி வளர்ச்சிக்கு இப்பேர்ப்பட்ட சஞ்சிகையை வெளிக்கொணரும் திரு.பிரபு அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும்!

வாசகர்களுக்கு ஒரு வார்த்தை! ஒன்றுபட்டு தமிழ்க்கலை இலக்கிய வளர்ச்சிக்காகப்பாடுபடுவோம்.நல்ல முயற்சிக்கு என் துணை எப்போதும் உண்டு.

திரு.கள்ளபிரான் அவர்களின் தமிழ்ச் சேவைக்கு நன்றிகூறி, இலக்கிய அறிவுநூல் முயற்சிகள் வெற்றிபெற வாழ்த்தி விடை பெறுகிறேன்.

(தமிழர் முன்னேற்றத்துக்கு வழிகாட்டும் மேலாண்மை நூலைப்பெறவிரும்புவோர் தொடர்புறுக:

Mr.T.R.Kallapiran / A.G.M.,
Indian Overseas Bank/Centl Office
762,Anna Salai,Madras 600-002
Tamilnadu,India.

## மலையகக்கடிதம்:

அன்பு நண்பா!

உலகின் பலநாடுகளிலும் கடினமாக உழைக்கும் தொழிலாளர்கட்காக மே தினம் கொண்டாடப்படுகிறது. ஆனால் அவர்களது நியாயமான கோரிக்கைகள் பலநாடுகளில் புறக்கணிக்கப்பட்டே வருகின்றன.

அவர்களது கோரிக்கைகள் காலத்திற்கு காலம்,இடத்துக்கு இடம் வேறுபட்டவையாக விளங்குகின்றன.உதாரணமாக சூழல்பாதுகாப்பு,மனித உரிமை,ஓய்வுநேரம் என பலதரப்பட்ட கோரிக்கைகள் தொழிலாளரால் உலகின் பல்வேறு பகுதித்தொழிலாளராலும் முன்வைக்கப்படுகின்றன. இவை புதிய பரிமாணங்களைக் கொண்டவையாக விளங்குகின்றன. ஆனால் இலங்கையின் மலையகத்தில் அதற்கு எதிர்மாறாக பழைய கோரிக்கைகளே மீண்டும்,மீண்டும் மே தினத்தில் ஒவ்வொரு முறையும் கேட்கக்கூடியதாக இருக்கிறது. மலையகமக்களின் கோரிக்கைகள் ஒருநூற்றாண்டு காலம் பழைமை வாய்ந்தன.அதாவது 'வருடத்துக்கு 300 நாள் வேலை கொடு ' மாதச்சம்பளம் கொடு "குடியிருக்கும் வீடுகளை சொந்தமாக்கு ' அதைவிட அவர்களின் எவ்வளவோ அன்றாடப் பிரச்சனைகள் தான் மேதினத்தில் மீண்டும், மீண்டும் ஒலிக்கின்றன.ஆனால் அவை யாவும் செவிடன் காதில் ஊதிய சங்கு போலவே உள்ளன.இந்த நிலையை எப்படி மாற்றுவது? என்று தான் புரியவில்லை.

இவர்கள் ஒவ்வோர் மே தினத்துக்கும் புதிய பதாகைகளை எழுதுவதில்லை! இவர்களின் கோரிக்கைகள் மிகப்பழமை வாய்ந்ததாக இருப்பதாலும்,கோரிக்கைகள் ஒருபோதும் நிறைவேற்றப்படாததாலும் இம்முறை தூக்கிச் செல்லும் பதாகைகளைப் பத்திரப்படுத்தி மறுமுறை அதையே பாவிக்கிறார்கள்.செலவும் அதிகம் இல்லை தானே! என்பதால் ஆகவும் இருக்கலாம்.

இந்தச்சிறு மலையகத்தில் அட்டன், டிக்கோயா,அக்கரப்பத்தனை,நுவரெலியா,பதுளை,பண்டாரவளை,ஆகிய நகரங்களில் பல்வேறு தொழிற்சங்கக் கூட்டங்கள் நடைபெற்றன.நாளுக்கு நாள் தொழிற்சங்கங்கள் கூடுகின்றனவே அன்றி மலையகமக்களின் அன்றாட,அடிப் படைப்பிரச்சனைகள் தீர்ந்தனவா? என்றால் பதில் இல்லை என்பதே!

அதுமட்டுமன்றி மலையகத்தில் மே தினத்திற்கு சில தொழிற்சங்கங்கள் தென்னிந்திய திரைப்படப்பாடகர்களை பல லட்ச ரூபாய்களை அள்ளி வீசி அழைக்கிறார்கள்.ஆனால் மலையகத்தில் பாடக்கூடியவர்களைப் பாடவைத்து,அவர்கட்கு சன்மானம் வழங்கி ஊக்குவித்தால் அவர்கள் பல வழிகளால் முன்னேற இடமுண்டு. ஆனால் டாம்பீகமான பத்திரிகை விளம்பரங்கள்,ஆடம்பரங்கள் என வீண்விரயம் செய்யும் பணம்,மலையக மக்கள் கல்வி,கலைகலாசாரவளர்ச்சி, புதிய தொழில்வாய்ப்பு,வீடமைப்பு ,நூலக-தகவல்பிரிவு அமைப்பு,வெளிநாட்டுகல்வி,தொழில்,வர்த்தக முயற்சிகள் சுகாதார முயற்சிகள்,சிறுகைத்தொழில்,குடிசைக்கைத்தொழில் என பல்வேறு திட்டங்கட்குப் பயன்படுத்தப்படலாம்.திறமையான மாணவர்,கலைஞர்,பொதுசேவையாளர்,அறிஞர்,ஆசிரியர்,பெண்விடுதலைவீரர்,குழந்தைகள் உரிமைக்குப்பாடுபடுவோர்,தொழிற்சங்கவாதிகள்,ஏனைய சுயநலமற்ற மலையக சேவையாளர்கட்கும்,நட்புறவு,ஐக்கியம் காட்டும் வேற்றின அரசியல்வாதிகட்கும் பரிசு,பாராட்டுகள், வழங்கிக்கௌரவித்தல் நன்றே!

மலையகமக்கள் வாழ்வுயர உலகத் தமிழர் புதிய ஆலோசனைகள், யுக்திகளை முன்வைக்குமாறும்,புதிய தகவல்கள்,தொடர்புகள்,கருத்துக்களை பகிர்ந்து கொள்ளுமாறும் அன்புகலந்த உரிமையுடன் அறைகூவல் விடுக்க விரும்புகிறேன்!

மாத்தளை............ அருள்பிரகாஷ்

(பல்வேறு நாட்டு அரசுகள்,கல்லூரிகள்,பல்கலைக்கழகங்கள்,தொழில்நிறுவனங்கள்,பொது,தனியார் தொண்டர் ஸ்தாபனங்கள்,தொழிற்சங்கங்கள், அரசியல்கட்சிகள் மூலம் கல்வி,பயிற்சிநெறி,மாற்றுத்திட்டங்கள்,கருத்தரங்குகள்,புலமைப்பரிசுகள்,தொழில்வாய்ப்பு(உதாரணமாக இஸ்ரேல் அண்மையில் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களை ஆசியாவிலிருந்து எடுத்ததாம்.) என பலவழிமுறைகளை முயற்சிப்பதுநலம்!குறிப்பாக அறிவு,தகவல் மக்கட்கு அளிப்பது நீண்டநோக்கில் மிகமிக நன்மை அளிக்கும்.அத்துடன் சர்வதேசரீதியில் கல்வி,தொழில்வாய்ப்பு பற்றிய தகவல் ,ஆய்வு,தொடர்புகட்கு தனியான அமைப்புகளையும் நிறுவலாம். ஆ-ர்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஜனநாயகம்,மனிதஉரிமை,சுதந்திரம்,சமாதானம்,நீதியுடன் கூடிய தமிழர் முன்னேற்றம்,ஐக்கியம் கருதுவதே நம் பணி!
தமிழார்வலர்,எழுத்தாளர்,கல்லூரி,பொதுநூலகமுகவரிகள் தந்துதவுக! தகவல்சேவையில் உங்கள் நாட்டு விபரங்கள் பகிர்க!
தகவல் சேவை பலாபலன்களை வாசகர்களுடன் பகிரலாம்.சஞ்சிகை தொடர்ந்து பெற விரும்பினால் சந்தா தந்து பதியுங்கள்!

## சர்வதேச தமிழர் தகவல் சேவை

1.'பாரிஸ் ஈழநாடு'கிடைக்கப்பெற்றமைக்கு எமது நன்றிகள்பாராட்டுக்கள்!! ஈழத்துச்செய்திகள்,கட்டுரைகள் கவிதைகள்,சிறுகதை,செங்கைஆழியான்-தொடர்கதை ஆகியனதாங்கி சிறப்பாகவெளிருகிறது. நண்பர்கள் இ.கந்தசாமி,எஸ்.எஸ்.குகநாதன், நிர்வாகி எஸ்.பாலச்சந்திரனுக்கும் இதயபூர்வமான வாழ்த்துக்கள்! பாரிஸ்.ஈழநாட்டுடன்'சர்வதேசதமிழர்' நட்புறவு,ஒத்துழைப்பு,மாற்றீடுமேற்கொள்ளும்.

Eelanadu Paris,39, Bld de la Chapelle,75010,Paris,France.
Tel.1.42051858 Fax.1.42051851

2.தமிழ்வீடியோ குழந்தைகட்கென பலஅம்சங்களுடன் வெளிவந்துள்ளது. மாவை நித்தியானந்தன்,சி.எஸ்.யோகானந்தன் நெறிப்படுத்தியுள்ளனர்.

Bharathi Academy,PB.1357,
Clayton South,VIC 3169,Australia.
தகவல்.லெ.முருகபூபதி

3.நோர்வே வெளிநாட்டமைச்சு,தகவல் பிரிவு இந்நாட்டுமுக்கியசெய்திகளை 'சர்வதேசதமிழருக்கு'அனுப்பி உதவுவதற்கு எம் ஆழமான நன்றிகள்.

Utenriks Dept.,/informasjonavd.,
PB.8114,Dep.,0032 OSLO

4.டென்மார்க் சர்வதேச அபிவிருத்தி உதவிநிறுவனமுகவரி:

Danida
Ministy of Foreign Affairs
Asiatisk Plads 2
1448 Copenhagen K
Denmark

5.நோர்வேகெயார' தொண்டர் உதவி நிறுவன தொடர்புகட்கு :

CARE Norge
Storgt. 33-c 0184 OSLO

6.போரூட் உதவிநிறுவனதொடர்புக்கு

FORUT
boks 300, 2801 Gjøvik. Tlf. 61 17 74 22

7.றெட்பாணா நிறுவனதொடர்புக்கு

Redd Barna
Personal & Organisasjonsavd.
Postboks 6200 Etterstad, 0602 Oslo

8நோராட் உதவிநிறுவனதொடர்புக்கு

NORAD
Kontoret for
Naturressursforvaltning
Postboks 8034- Dep.
N – 0030 OSLO

9.தேவாலய அவசரஉதவிநிறுவனம்:

Kirkens Nødhjelp, Postboks 4544
Torshov, 0404 Oslo

10.நோர்வே அகதிகள் கவுன்சில் மூலம் அகதிகட்கு உதவிபெற:

NORWEGIAN REFUGEE COUNCIL
Pilestredet 15 B, 0164 Oslo
Box 6758 St. Olavs plass, 1030 Oslo
+47 22 11 65 00 - Fax.: +47 22 11 65 01

11.றெட்பாணா/சுவீடன் உதவிநிறுவன

**Rädda Barnen**
107 88 Stockholm.

12 சர்வதேச கால்நடை ஆய்வுநிறுவன

ILRI Nairobi
P.O. Box 30709
Nairobi, Kenya
Tel: 254-2-630743

ILRI Addis Ababa
P.O.Box 5689
Addis Ababa, Ethiopia
Tel: 251-1-613215

13.முக்கிய ஐ.நா.அமைப்புகளில் வேலைவாய்ப்பு;உதவிகோர முகவரிகள்:

**UN** United Nations Headquarters, New York, N.Y. 10017, USA.
Tel. +1 (212) 963 12 34.
Fax. +1 (212) 963 48 79.

**UNOG** United Nations Office at Geneva, Palais des Nations, CH-1211 Geneva 10, Switzerland.
Tel. +41 (22) 917 12 34.
Fax. +41 (22) 917 00 05.

**UNOV** United Nations Office at Vienna, Vienna International Centre, P.O. Box 500, A-1400 Vienna, Austria.
Tel. +43 (1) 21 13 10.
Fax. +43 (1) 23 21 56.

**FAO** Food and Agriculture Organization of the United Nations, Via delle Terme di Caracalla, I-00100 Rome, Italy.
Tel. +39 (6) 522 51.
Fax. +39 (6) 522 53 152.

**IBRD** International Bank for Reconstruction and Development. European Office 66 Avenue d'Iéna, F-75116 Paris, France
Tel. +33 (1) 40 69 30 00.
Fax. +33 (1) 40 69 30 65.

**IFC** International Finance Corporation, 1818 H Street, N.W. Washington, D.C., 20433, USA.
Tel. +1 (202) 477 12 34:
Fax. +1 (202) 477 63 91.

**IFAD** International Fund for Agricultural Development, Via del Serafico 107, I-00142 Rome, Italy.
Tel. +39 (6) 545 91.
Fax. +39 (6) 504 34 63.

**ILO** International Labour Office, 4. Route des Morillons, CH-1211 Geneva 22, Switzerland.
Tel. +41 (22) 799 61 11.
Fax. +41 (22) 798 86 85.

**IMF** International Monetary Fund, 700 19th Street, N.W. Washington D.C. 20431, USA.
Tel. +1 (202) 623 70 00.
Fax. +1 (202) 623 74 85.

**UNV** United Nations Volunteers, Palais des Nations, CH-1211 Geneva 10, Switzerland.
Tel. +41 (22) 788 24 55.
Fax. +41 (22) 788 25 01.

**WFC** World Food Council, Via delle Terme di Caracalla, I-00100 Rome, Italy.
Tel. +39 (6) 579 71.
Fax. +39 (6) 514 60 97.

**WFP** World Food Programme, Via Christoforo Colombo 426, I-00145 Rome, Italy.
Tel. +39 (6) 52 28 21.
Fax. +39 (6) 512 74 00.
513 35 37.

**WHO** World Health Organization, 20, Avenue Appia, CH-1211 Geneva 27, Switzerland.
Tel. +41 (22) 791 21 11.
Fax. +41 (22) 791 07 46.

**WMO** World Meteorological Organization, Case postale No. 2300, CH-1211 Geneva 2, Switzerland.
Tel. +41 (22) 734 64 00.
Fax. +41 (22) 734 23 26.

**UNHCR** Office of the United Nations High Commissioner for Refugees, Case postale 2500, CH-1211 Geneva 2 Dépôt, Switzerland.
Tel. +41 (22) 739 81 11.
Fax. +41 (22) 731 95 46.

**UNICEF** United Nations Children's Fund, Three United Nations Plaza, New York, N.Y. 10017, USA.
Tel. +1 (212) 326 70 00.
Fax. +1 (212) 888 74 65.

**UNIDO** United Nations Industrial Development Organization, Vienna International Centre, P.O. Box 300. A-1400 Vienna, Austria.
Tel. +43 (1) 21 13 10.
Fax. +43 (1) 23 21 56.

**UNDP** United Nations Development Programme, One United Nations Plaza, New York, N.Y. 10017, USA.
Tel. +1 (212) 906 50 00.
Fax. +1 (212) 826 20 57.

**UNDRO** Office of the United Nations Disaster Relief Coordinator, Palais des Nations, CH-1211 Geneva 10, Switzerland.
Tel. +41 (22) 734 60 11.
Fax. +41 (22) 733 98 79.

**UNEP** United Nations Environment Programme, P.O. Box 30552, Nairobi, Kenya.
Tel. +254 (2) 62 12 34.
Fax. +254 (2) 22 68 90.

**UNFPA** United Nations Population Fund 220 East 42nd Street New York, NY 10017
Tel. +1 (212) 297 5000.
Fax. +1 (212) 370 0201.

**UNESCO** United Nations Educational, Scientific and Cultural Organization 7, Place de Fontenoy, F-75007 Paris, France.
Tel. +33 (1) 45 68 10 00.
Fax. +33 (1) 45 67 16 90.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நோர்வேயில் தமிழ்மாதசஞ்சிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.பதிவு இல:90/310-ரி.1.எஸ்.சர்வதேசதர தொடர் இலக்க நிலையம்
யுனெஸ்கோ,பாரீஸில் பதிவுசெய்யப்பட்டது.இல.0805-7443.கணணியால் பிழையின்றி எழுதிய ஆக்கம் உடன் பிரசுரமாகும்.
தரமான ஆக்கங்கள்,ஓவியங்கள்,புகைப்படங்கள்,காட்டூன்கள் மாதாமாதம் அனுப்புவோர்க்கு இலவசசந்தா உண்டு.

# பாகுபாடு

நான் "கீபிள்"எனப்படும் தொழிற்சாலையின் பொது விடுதிக்குச் சென்றிருந்தேன். அனேகமான தமிழர்கள் இங்கு வந்து போவது உண்டு."வீரகேசரி" வருவதால் அனைவரும் புதினம் அறிவதற்காக இங்கு வருவார்கள். நானும் பத்திரிகை வாசிப்பதற்காகவே அங்கு சென்றேன். பத்திரிகைகள் வாசித்துக் கொண்டு இருக்கும் போதே வினோதன் அங்கு வந்தான்.

வினோதன் வித்தியாசமானவன். இங்கு படிப்பதற்காய் வந்து தற்போது அகதியாய் தன்னை மாற்றிக் கொண்டவன். கடைஒன்றில் வேலை செய்து வந்த வினோதனுக்கு தான் இந்த தமிழரோடு சேர்த்தி இல்லை என்கின்ற எண்ணம். அனேகமான தமிழரோடு அவன் கதைப்பதில்லை. பத்திரி கை வாசிக்க இங்கு வருவான். அல்லது வர்மன் என்கின்ற தமிழ் நட்பை மட்டும் நாடுவான். அதையும் விட்டால் எங்காவது நோர்வே விடுதியில் கோப்பி அல்லது பியர் குடித்துக் கொண்டு இருப்பான். வினோதன் பிறப்பால் உயர்சாதி என்பதால் தனக்கு இங்கிருக்கும் அனேகரோடு என்ன வேலை என்கின்ற எண்ணம் கொண்டவன். தங்களுக்குச் சமமானவர்கள் நோர்வே மக்கள்! என்று எண்ணி அவர்களோடு பழக வேண்டும் எனத் துடித்தான். உள்ளே இத்தனை ஆசை இருந்தாலும் வெளியே தானும் எல்லோரையும் மதிப்பவன்! எனப் போலியாய்க் காட்டிக் கொள்வான். போலிகளைச் சமுதாயம் இலகுவாக நம்புவதால் அவனையும் இந்தச் சமுதாயம் இலகுவாகவே நம்பியது.

சமையல் அறையில் யாரோ சமைத்துக் கொண்டு இருந்தனர். நானும் பத்திரிகையில் மூழ்கிப் போய் இருந்தேன். வினோதன் மேலோட்டமாய் மேய்ந்தான். அவனுக்கு அதிக புதினம் இருப்பதாய் தோன்றவில்லை. சிறிது நேரம் பேசாது இருந்தான். வினோதன் ஏதாவது கதைக்க விரும்புகிறானோ? என்கின்ற எண்ணத்தோடு நானும் பத்திரிகையை வைத்துவிட்டு அவனை நோக்கினேன்.

"நல்ல வெதர் என்ன?"
நோர்வேக்கு வந்த பின்பு அனேகர் தங்கள் கதைகளைத் தொடங்குவதற்குப் பாவிக்கும் முறையைத்தான் அவனும் பாவித்தான்.
"இதுதான் இஞ்ச கூடின சமர் வெக்கையாக இருக்கும்."
"இவங்கட நாட்டில இருந்து கஸ்ரத்திலயும் ஊரில போய் இருக்கலாம். இஞ்ச என்ன பொழுது போக்கு இருக்குது. எங்கபோனலும் ஒரேபிரச்சனையாத்தான் இருக்குது."
"என்ன! என்ன பிரச்சன?" நான் வினோதனைத் தூண்டினேன்.
"ச்..அதவிடு எல்லாம் நடக்கிற பிரச்சனதான்!"
"ஓ.கே.! உனக்கு விருப்பமில்லையாக்கும் , சொறி!"
"அப்பிடி ஒண்டுமில்ல! நேற்று கடையில வேலை செய்யிறவ, என்ன "பாட்டிக்கு" கூப்பிட்டு இருந்திச்சினம். சரி எண்டிட்டுப் பாட்டிக்குப் போனான். "பாட்டியில தெரியாதே, எங்களக் கறுப்பர் எண்டமாதிரி வித்தியாசமா பழகுதுகள்! வெளிப்படையா கறுப்பன் எண்டு சொல்லாட்டியும் அவையின்ர நடத்த அப்பிடித்தான். எனக்குப் பெரிய "சொக்"கா இருந்திச்சுது. எப்பிடி எண்டாலும் எங்கள இரண்டாம் தரமாத் தான் பாக்கிறாங்கள். அவங்களுக்கு எப்பவும் நாங்கள் இழிவாத்தான் தெரியிறம். இவங்களிட்ட நாங்கள் இழிவா இருக்கிறதிலயும்பாக்க ஊரிலயே இருந்திடலாம்."
"ச்.. இங்க வந்தா இத எல்லாம் பொறுத்துக்கத்தான் வேணும்."
"அதுக்காக மானம் மரியாதை இல்லாமல் என்ன வாழ்க்கை? மதிப்புக் குடுத்தா அவங்கள் எங்களத் திருப்பி மதிக்கோணும்."
"அனேகமான நல்ல ஆக்கள் எங்கள மதிக்கினம் எல்லே!"
"அப்பிடித்தான் நான் நினைச்சனான். ஆனா நேற்று கிட்டத் தட்ட நான் தனியா இருக்க வேண்டி வந்திட்டுது. அவங்கள் ஒருத்தரும் அதுக்குப் பிறகு என்னோட வந்து இருக்கேல்ல. எப்பிடி இருக்குமெண்டு யோசிச்சுப் பாரும். எனக்கு அவமானமா இருந்திச்சுது. அழுக வந்திடுமோ? எண்டு பயமா இருந்திச்சுது. அப்பதான் எங்கட நாடா இருந்தா இப்பிடியெல்லாம் வருமே எண்ட மாதிரி இருந்திச்சுது!"
"ஏன்வராது? அங்கையும் கன்பேர் இப்பிடி வருத்தப் படுகினம்தானே?"
"என்ன சொல்லுறிர்!"
"இஞ்ச சில தமிழர்களே தமிழரோட பழகிறேல்ல. அது நாட்டில இருந்தா இன்னும் மோசமா இருக்கிறத பாக்கலாம். தமிழனே தமிழனோட பழகாம இருக்கேக்க, நோஸ்கன் பழகாம இருக்கிறத எப்பிடிக் கண்டிக்கிறது!"

வினோதனின் முகம் மாறிவிட்டது. அவனது முகத்தில் கோபம் வெடித்தது . தன்னைக் குத்திக் காட்டுவது அவனுக்குப் பிடிக்கவில்லை. திருப்பிக் கதைக்க விரும்பாதவனாய் மீண்டும் செய்தித் தாள்களுக்குள்ளே புகுந்தான். நான் சிரிப்பை அடக்கமுடியாது அந்தக் கோலைவிட்டு நகர்ந்தேன்.

"தன்னையே தான் புரிந்து கொள்ள முடியாத மனிதன், மற்றவர்கள் தன்னைப் புரிந்து கொள்ளவில்லை!" எனக் கவலைப்படுவது விந்தையாக இருந்தது.

இ.தியாகலிங்கம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உலக தமிழ்ப்பத்திரிகை/சஞ்சிகைகள், நூல்கள் மாற்றுத்திட்டத்தில் பங்குகொள்ளவிரும்பின் உங்கள்வெளியீட்டை அனுப்புக! முகவரியுடன் அறிமுகமாகும்! சர்வதேச தமிழரையும் உங்கள் இதழில் முகவரியுடன் அறிமுகம் செய்ய மறக்கவேண்டாம் ! சர்வதேச இணைப்பாளராக தொண்டுபுரிய ஆர்வமுள்ள அபிமானிகள், உற்சாகம் உள்ளோர் உடன் தொடர்புகொள்க!

## சர்வதேச தமிழர் கவியரங்கம்

### யார் கவிஞன்...........?

மக்களின் கருத்துதனை கவியாக்கி
மக்களுக்குத்தருபவன் மடையன்!
தன்சுதந்திரக்கருத்துக்களை கவியாக்கி
தயங்காமல் தருபவனே கவிஞன்!!
எதற்கும் கலங்கமாட்டான்!
எவனுக்கும் அஞ்சிடமாட்டான்!!
கவிஞன் ஒரு அணுகுண்டு!
கவிஞனை எதிர்க்கும் கயவர்களை
பேனா எனும் கத்திகொண்டு
அவமானமெனும் ரத்தம் வழியவைப்பான்!
கவிஞனின் கற்பனை களங்கமில்லா
கடல் அலை போன்றது!
கவிதை வடிக்க,வடிக்க
கடைசிவரை வந்துகொண்டேயிருக்கும்!
பிரச்னைகளும்,அனுபவங்களுமே உனை
பெரும் கவிஞனாய் உருவாக்கும்!!

**இரா.இரவி........................மதுரை-1**

### பெண்ணை எரித்து காண்பது...?

பார்வையிலே ஒரு சுகம்,
பழகும் விதத்திலே ஒருசுகம்,
நினைக்கையிலே ஒருசுகம்,
நெருங்கிவந்து இணைகையிலே
ஒருசுகம் தருபவளே பெண்!

இன்பம் தரும் பெண்பிறவி
இயற்கையிலே அவளொரு தனிப்பிறவி!
வீட்டினிலே ஒளிவிளக்கு,
விரி உலகு,வியந்துபேசும்
அவள் ஒரு திருவிளக்கு!

வனிதை இல்லா வாழ்வும்
ஒருவாழ்வாகுமா?
வனிதை இருந்தால் வளம் வரும்
வலிமையும் வரும்;
வாழ்க்கை சுகம்தரும்!

ஆணுடன் பணம்சேர்ந்தால் சுகமா?
இல்லையே!
ஆணுடன் பெண்சேர்ந்தால் சுகம்,
அதை அறியா அறிவிழந்த பாவிகளே
பணத்துக்காக பெண்ணை எரித்து
பெண்ணைவிட உயர்ந்ததாக இந்த
உலகில் எதைப்பெறப்போகிறீர்?

**ப.வெங்கடேசன்-வடஆர்க்காடு**

### நம் தமிழர் பண்பாடு...!

நன்றிமறக்கா குணம் உண்டு,
நாசுக்காக பேசும் தரம் உண்டு,
நாட்டைப்பற்றிய நாட்டமுண்டு,
மற்றவரிடத்தில் மதிப்புமுண்டு
மானத்தோடு வாழும் தரமுண்டு,
மலரைப்போன்ற மனம் உண்டு,
மற்றவரை கவரும் குணம் உண்டு,
மற்றவரில் மயங்கும் தனமுண்டு,
வாரி வழங்கும் மனமுண்டு,
வாக்குத்தவறா குணம் உண்டு,
தமிழருடன்தாயாய் பழகும்குணமுண்டு
நாடுவிட்டு நாடு நாம் வந்தாலும்
நட்புக்கு ஏதும் குறையுண்டா?

**எஸ்.காளிதாஸ்-சவுதிஅரேபியா**

### கூடப்பிறந்தவர்கள்.......!

அக்காளும்,தங்கையரும்.... சுந்தரங்கள்!
அவர்களுக்கு உழைக்கின்ற
அண்ணன்,தம்பியர்கள்..... இயந்திரங்கள்!
அதுகண்டு அக்காளவள்...
ஐயோ,பாவம் தம்பி!என்பாள்,தந்திரந்தான்
தங்கையவள்,அண்ணன் ஒருகோவில்
என்பாள்!மந்திரந்தான்!
தந்திரமாய் இரக்கம்காட்டி,
மந்திரமாய் மதிப்பளித்து,
தங்களது சீதனத்தைக்கறந்துகொண்டு
தனித்துவமாய் கணவனுடன் வாழுமிந்த
அக்காளும்,தங்கையரும் எமக்கு,
எக்காலும் ஏற்ற அன்பைத்தருவாரில்லை
புகுந்தவீடு போனபின்பு,
பிறந்தவீட்டுச்சோதரற்கு
அவர்களது அன்பு அது....அந்திரந்தான்

**பொன்.நவநீதன்-இலங்கை**

### பொய் சொல்ல விரும்பவில்லை!

பொய்சொல்ல விரும்பவில்லை......
தங்கத்தட்டில் உனக்கு
சோறுபோடுவேன் என்று,
ஏழைநானே இலையில்தான்!
பொய்சொல்லவிரும்பவில்லை......
தினம் நிலாச்சோறு ஊட்டுவேன் என்று
இடையில் அமாவாசை வருவதால்!
பொய்சொல்லவிரும்பவில்லை......
கண்ணீர் வராமல் பார்ப்பேன் என்று,
சமைக்க வெங்காயம்நறுக்கவிருப்பதால்!
பொய்சொல்ல விரும்பவில்லை......
உன்பாதையில் ரோஜாபரப்புவேன் என்று
அதில் முட்கள் இருப்பதால்!
பொய்சொல்ல விரும்பவில்லை......
என்னிதயத்தில் வேறுபெண் இல்லையென
என் தாய் இருப்பதால்!!!

**கோட்டைக்குப்பம் முகமதுகவுஸ்**

### வெள்ளைமனிதா!இது தருணம்!

வெள்ளைமனிதா!வெள்ளைமனிதா!!
வெட்கம்கெட்ட வெள்ளைமனிதா!
உலகம்சுற்றிப் பார்க்கவந்து
எல்லாநாடும் அடிமைகொண்டாய்!
ஆபிரிக்க வலிய மக்களை,
அடிமைகளாக்கி சங்கிலிபூட்டி
அமெரிக்காவுக்கு ஏற்றுவித்தாய்!
ஆசியர்கள்,ஆபிரிக்கரையும்
ஐந்நூறுஆண்டுகள் ஆட்டிப்படைத்தாய்
இனத்துவேசம்,பாகுபாடு,அவமரியாதை
இன்னமும் ஏண்டா?
ஆயுதம் எல்லாம் ஏழைக்கு விற்று
ஆட்டிப்படைப்பதும் ஏண்டா!டோய்!!
ஆபத்தான கழிவுகள் கொட்ட
எம்வீட்டுக்கோடி தான் கிடைத்ததுவோ?
தேயிலை,ரப்பர் மூலப்பொருட்கள்
மலிவாய் நீயே வாங்குவதால்
மலையகத்தமிழர் வாழ்வுயராதே
மறப்பதும்,சிரிப்பதும் ஏண்டா?டோய்!
ஆயிரக்கணக்கில் ஆடம்பரப்பொருட்கள்
அநாவசியமாக விற்கின்றாய்!
உலகவங்கிக் கடன்கள் தந்து எமை
ஆயுள்கடன்கார னாக்கின்றாய்!
ஆயுதம் போக, அகதிகள் வரவும்
கதவினை அடித்து சாத்துகிறாய்!
பாஸ்போட்டின்றி நீயும் வந்து
பன்னூறு காலம் ஆண்டாயே!
பாஸ்போட் இன்றி நாம் இங்குவந்தால்
பாவம்பாராது துரத்துகிறாய்!
வெள்ளைமனிதா!வெள்ளை மனிதா!!
வேளை இதுவே இரக்கம் காட்டு!!

**சசி-நோர்வே**

### கண்ணீர் பலவிதம்..........!

ஏழைகள் தங்கள் வறுமையால்
விடுவதும் கண்ணீர்!
தாய் பிள்ளையை பிரசவிக்கையில்
வருவதும் கண்ணீர்!
மகனை மற்றவர் புகழ்கையில்
பனிப்பதும் கண்ணீர்!
பணக்காரன் காசுகிடைத்ததும்
விடுவதும் கண்ணீர்!
பசியின் கொடுமையால் ஏழை
துடிப்பதில் கண்ணீர்!
கணவனை மயக்க மனைவி
விடும் கண்ணீர்!
சகோதர,சகோதரியர் பாசப்பிணைப்பால்
வருவதும் கண்ணீர்!
அரசியல்வாதிகள் தம்சுயநலத்துக்காய்
நீலிக்கண்ணீர்!
கடவுள் துன்புறும் தமிழருக்காய்
விடுவது மேகக்கண்ணீர்!
தமிழன் உலகெங்கும் சித்திரவதைபட்டு
அகதியாய் விரட்டப்படுகையில்
எந்நெஞ்சில் செந்நீர்!!

**ஜோ.ஜகந்நாததேவர்-திருச்சி**

### ஈழத்திலே எழும் கீதம்!

(காற்றினிலே வரும் கீதம் -மெட்டு)

ஈழத்திலே எழும் கீதம்-அண்ணன்
திலீபனைப்பாடும் கீதம்!
உள்ளம் உருகும் கீதம்
(ஈழத்திலே)

தமிழீழமண்ணில் ஒலித்திடும்ராகம்
தாய்மண்ணைக்காத்திடும் வீரம்!
ஈழமக்கள் கேட்டே மயக்கும்
தியாகி திலீபனின் வீரம்!
(ஈழத்திலே)

நெஞ்சினில் தியாக தீபத்தை ஏற்றி
நினைவளிக்கும் கீதம்!

நல்லூர் வீதியில் திலீபன்இருந்திட
மனங்கள் வெந்திடவும்,
சூழஇந்தியன் கேளா இதயம்
ஒதுங்கி நின்றிடவும்
ஆ! என் சொல்வேன் தியாகி!
திலீபனின் உருகியஉடலும்,உயிரும்

(ஈழத்திலே)

பன்னிருநாட்களாய் நீருமின்றி
தன்னுயிர் ஈந்த தனயன்!
தான்வாழும் வயதில் தன்னினம் வாழ
தன்னையே கொடுத்தான் திலீபன்!
(ஈழத்திலே)

**திருமதி.க.சண்முகப்பிரியா**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மிகத்தரமான பேட்டி,சிறுகதை,கட்டுரைகட்கு,நோர்வே ∴பிளாக்ஸ் லொட்டரி பரிசாக அனுப்பப்படும்.(முன் பெட்டியைச்சுர
ண்டுக! 3 இலக்கம் ஒத்ததெனின் அதுவே பரிசு! நேரடியாக அதன்பின்புறமுள்ள முகவரியுடனோ/எம்முடனோ தொடர்புறுக!
இலாபநோக்கின்றி சேவைநோக்கில் ;பலரது அரசியல்,சமூக,சமய,கருத்துக்களைத்தாங்கிவரும் நடுநிலைச்சஞ்சிகை இது.

## மாஸ்கோவில் எனது மறக்க முடியாத அனுபவங்கள்!

ஆரையம்பதி.க.சபாரத்தினம்

'ஹலோ! உமக்குப்புரியாது போல்
இருக்கிறது.அந்தப்பெண் வசந்தா
இலங்கையிலுள்ள தன் தமையன்
மூலமாக எங்களைத்தலையிடச்சொ
ல்லி கொழும்பு வெளிவிவகார அமைச்
சுக்கு புகார் ஒன்றைக்கொடுத்துள்
ளார்.அதனால் கட்டாயம் அந்தப்பெ
ண்ணுடன் பேசியே தீரவேண்டும்! '
'பேசமுடியாது!என்ன செய்யப்போகி
றீர்? '
'யானையின் பலம் அறியாத பன்றியி
ன் பாதைவிலகாதகதை போலத்தான்
இருக்கிறது உமது கதை!எப்படி
உமக்குப்புரியவைப்பதென்று தான்
எனக்குப்புரியவில்லை! '
'எனக்கு எல்லாம் புரியும்.உமது
ஆலோசனை தேவை இல்லை '
'நன்றி!ஆனால் இதன் விளைவு பார
தூரமாக இருக்கப்போகிறது.நன்றா
க யோசித்துச்சொல்லும்! '
'முடியாது!முடியாது!! பேசவே முடியா
து. '
'இன்னும் ஒரு அரைமணிநேரத்தில்
மீண்டும் டயல் செய்வேன்.அதற்குள்
நன்றாகச்சிந்தித்து முடிவைக்கூறும்.
பின்விளைவுகள் கசப்பானதாயும்,கடு
மையானதாயும் அமையலாம்.அதற்
கு நான் பொறுப்பாளி அல்ல. '
அரைமணிநேரத்தில் மீண்டும் தொ
டர்பேற்படுத்த முயன்றேன்.இம்முறை
பதிலே இல்லை!தொலைபேசி கூவிய
ழைத்தது.குரல் கொடுக்க யாருமே
இல்லை. 'என் செயலாவது யாதொ
ன்றும் இல்லை.இனித்தெய்வமே 'என்
ற பட்டினத்தாரின் பாடலை முணுமு
ணுத்துக்கொண்டே காரியத்தில் துரி
தமாக இறங்கினேன்.எனது அறிக்
கையை மேலதிகாரியின் கவனத்திற்
கு சமர்ப்பித்தேன்.
திடுக்குற்ற அவர்,பின்னணியில்
ஏதோபயங்கரம் நடந்துகொண்டிருப்
பதாகக்கருதி சர்வதேச புகழ்படைத்த
ரஷ்ய துப்புத்துலக்கும் படையான
கே.ஜி.பி.அதிகாரிகளின் தயவைநாடி
உடன் அழைப்பு விடுத்தார்.அரசாங்க
உத்தரவு என்பதை மதித்த அந்தப்
படை அதிகாரிகள் அரைமணி நேரத்
தில் தூதரகவாசலில் ஜீப்வண்டியுட
ன் வந்து குதித்தனர்.வீட்டுமுகவரி
யோ,வேறு விபரமோ தெரியவில்லை.
தொலைபேசி இலக்கம் ஒன்றுதான்
உள்ள ஒரே ஒரு தடயம்!சிறிதுநேரம்
தம்முள் சம்பாசித்துக்கொண்டிருந்த
அந்த கே.ஜி.பி.அதிகாரிகள் திடீரெ
ன வெளியேறினர்.அடுத்த அரைம
ணிநேரத்தில் திருமதி.வசந்தா செல்
வராசாவையும்,3 வயது மதிக்கத்தக்க
அவரது பெண்குழந்தையையும்,பெட்
டி-படுக்கை உடைமைகள் சகலவற்று
டனும் தூதரகத்தில் கொண்டுவந்து
நிறுத்தினர்.நாங்கள் நினைத்ததுபோ
ல் விடயம் பாரதூரமானதாகத்தெரிய
வில்லை.ஆனால் பார்வைக்கு அந்தப்
பெண் பைத்தியம் பிடித்தவள் போல்
நின்றிருந்தாள்.
சுவிற்சலாந்திலுள்ள தன் கணவன்
செல்வராசாவின் ஆலோசனைப்படி
யே,ஒரு பிரயாணமுகவர் மூலம்,மாஸ்
கோ வந்தடைந்த வசந்தா,அவ்விடம்
சேர்வதற்கான சந்தர்ப்பத்தை எதிர்
நோக்கிக்கொண்டிருந்தார்.சட்டபூர்
வமாக விசா பெற்றுச்செல்வது, முடி
யாததாகையால் பயணமுகவரின்
கடற்கொந்தளிப்பு காலம் அமைதிய
டைந்து,சுமுகமான காலம் ஏற்படும்
மட்டும் ,மாஸ்கோவிலேயே தங்க
வேண்டி ஏற்பட்டது.வசந்தா மட்டுமல்
ல,இவருடன் அந்தக்குடியிருப்பு வீட்டி
ல் முகவரால் கொண்டுவரப்பட்டவர்
கள் பலர்.அவர்களில் சிலர் பெண்க
ளும் கூட.நாள் வீணாகிக்கொண்டே
போவதை எண்ணிய வசந்தா,கொழு
ம்பு,கிராண்ட்பாஸ் வீதியில் வசித்துவ
ரும்,தன் ஒன்றுவிட்ட தமையனுமான
திரு.குணசேகரத்துக்கு இவ்வாறாக
ஒரு தப்பான திடுக்கிடும் தகவலை
தொலைபேசிமூலம் கொடுத்திருக்கி
றார்.குணசேகரம் தலையிட்டு,முகவ
ரை வற்புறுத்தினால்,அதன் பயனாக
விரைவில் தான் சுவிற்சலாந்து போய்
விடலாம் எனும் பேதைப்புத்தியினால்
வந்த விவகாரமே இதுவாகும்.
வசந்தா ஒரு தமிழ்ப்பெண்ணாக
இருந்ததாலும்,கைக்குழந்தையுடன்
இருந்ததாலும்,அவருக்கு ஒருவாறு
தங்குமிடவசதியைத் தேடிப்பிடிக்கும்
சிரமம் தமிழனான என்னையே சார்ந்
தது. ஒருவாறு இடம் ஒழுங்குசெய்து,
காலையில் நான் சமைத்த சோறு,
சைவக்கறியையும் அருந்துமாறு
கூறினேன்.அவர் எதையோ பறிகொ
டுத்தவர் போல பரக்கப்பரக்க விழித்
துக்கொண்டிருந்தார்.அவரது நிலை
யை எண்ணி மனம் கலங்கினேன்.
'நான் ஒருபோதும் மச்சம் மாமிசம்
உண்பதில்லை,ஐயா! வேண்டாம்'
என மறுத்தார்.
'இன்று வெள்ளிக்கிழமை!நானும்
சைவபோசனம் தான்!பயமின்றி சாப்
பிடுங்கள்!பிள்ளைக்கும் பசி! ஊட்டி
விடுங்கள்! என வேண்டினேன்.
'எனக்குப் பசி இல்லை ஐயா! வேண்
டாம்!! ' என்று கண்ணீர் சொரிந்த
முகத்தோடும்,கவலை கூடிய குரலோ
டும் கூறினார்.பிள்ளையோ பசிக்கிற
து!என தாயைத்தொல்லைப்படுத்திக்
கொண்டிருந்தது.
'உங்கட்கு வேண்டாம் எனில்,பசியா
ல் துடிக்கும் பிள்ளைக்காவது ஊட்டி
விடுங்கள்! 'என்றேன்.பிள்ளையோ
உணவை ரசித்து,ரசித்து உண்டது.
மேலும் வேண்டும்!வேண்டும்!என கே
ட்டு வாங்கிப்புசித்தது.பசி உள்ளவன்
ருசி அறிவான்!என்ற வார்த்தையில்
தான் எத்தனை அர்த்தம்!
நான் சமைக்கும் உணவு எனக்கே
ருசிக்காதபோது,பசியுடன் இருந்த பி
ள்ளைக்கு அமிர்தமாக இருந்தது
போலும்!அந்தப்பிஞ்சு உள்ளத்தைப்
பொறுத்தவரை நான் சமையல்கலை
யில் வல்லவரான நளமகாராஜனோ!
'அம்மா,நானும் தமிழன் தான்.இலங்
கையிலிருந்து பலஆயிரம்மைல்களு
க்கப்பால் இப்போது இருக்கிறோம்.
என்னை உங்கள் சகோதரராக எண்
ணிக்கொள்ளுங்கள்.வீண்பயம் கொ
ள்ளாதீர்கள்! 'என்று கூறியதும்,அவர்
தனது கதையைக்கூறத்தொடங்கி
னார்.
யாழ்ப்பாணம்,நல்லூர் சொந்தஇடம்;
வறுமையான குடும்பம்;ஒரேஒரு மூத்
த ஆண் சகோதரன்.அவனே குடும்ப
த்தின் உழைப்பாளி;வழிகாட்டி;ஊன்
றுகோல்!
அந்தோ!பரிதாபம்!!விமானத்தாக்குத
லில் அரசவான்படை போட்ட குண்டு
அவன் தலையில் வீழ்ந்தது!அதில்
சிக்கித் துடித்துத்துடித்து இறந்து
போனான் அருமை அண்ணன்!
தந்தையும் இல்லை;தாயும் இல்லை.
ஒன்றுவிட்ட அண்ணனான குண
சேகரமே அவருக்கு ஒரேஉறவு.அதன்
படியே செய்தியைப்பரிவர்த்தனை
செய்துவிட்டார்,வசந்தா.
எனினும் தன்னைப்பழைய இடத்தி
லே விட்டுவிடும்படியும்,அங்கே பல
தமிழ்ப்பெண்கள் இருப்பதால் ஓரளவு
சந்தோசமாக இருக்கமுடியுமென்றும்
கூறியஅவர்,உற்றார்,உறவினர்
அனைவரையும் இழந்த பேதை எப்படி
ப்புலம்புவாரோ,அப்படியே தொடர்ந்து
விட்டுவிட்டுப் புலம்பிக்கொண்டார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சர்வதேசதமிழரில் வரும் கதைகளின் சம்பவங்கள், பெயர்கள் யாவும் கற்பனையே! வாசகர் கடிதங்கள் மிகவும் வரவேற்கப்படும்!
ஆக்கங்களை மீள்பிரசுரம் செய்யின் இச்சஞ்சிகையை குறிப்பிடுக! தங்கள் விமர்சனம்,ஆலோசனைகள் நமக்கு வழிகாட்டும்!
ஆக்கங்கட்கு ஆக்கியோரே பொறுப்பு. திருத்திவெளியிட ஆசிரியருக்கு உரிமையுண்டு. முகவரி மாற்றத்தை உடன் தருக!

அந்த வீட்டில் அடுத்து என்ன நிகழப் போகிறதோ?எனும் பயத்தில் அங்குள் ள மற்றவர்களும் பயந்துநிலைகுலை ந்து இருப்பதாகவும் கூறினார்.என் னோடு வாதிட்டவரை மற்றவர்கள் அனைவரும் சேர்ந்து எச்சரித்ததாயு ம் கூறினார்.தொலைபேசியில் அவர் களுடன் தொடர்புகொள்ள என் அனு மதியையும் கோரினார்.அவ்வாறே உடன்தொடர்பு கொண்டு,என்னைப் பற்றியும்,தனக்கு ஏற்படுத்தித்தரப்பட் டுள்ள வசதியையும் கூறி,அவர்களை அமைதி அடையும்படியும் கூறினார். முன்பு என்னுடன் வாதிட்ட மதன்,மன் னிப்புக்கேட்க விரும்புவதாகவும் கூறி தொலைபேசியை என்னிடம் தந்தார். ரிசீவரைப்பெற்று 'ஹலோ! 'என்றேன்.

'ஐயா!என்னை மன்னித்துக்கொள்ளு ங்கள்.தேவையின்றி வாதிட்டுவிட்டே ன்.'

'நான் அப்போதே எத்தனையோ தரம் கூறும்போதே, நீங்கள் கேட்கவில்லை யே !

'ஆம்!ஐயா,பிழை,என்னுடையதுதான். இங்கே தொலைபேசியில் அடிக்கடி பலர் முன்பு இப்படி பேசியதால் உங்க ளையும் .......வீணாக......! '

'ஆய்ந்து,ஓய்ந்து பாராக்காரியம் தான் சாகக்கெடும் என்பார்கள்.எதற் கும் அந்தப்பெண்ணுடன் கதைக்க விட்டிருந்தால் இந்த வீண்பிரச்சனை யை தவிர்த்து இருக்கலாம் அல்லவா! எத்தனை தடவைகள் முயன்றேன்? அரசாங்க அறிவுறுத்தலை அப்படியே விட்டுவிடவும் முடியாது,என்பது தெரி யும் தானே. '

'நீங்கள் என்னை மன்னித்ததாக ஒரு தடவை கூறுங்கள்.இப்படியான நல்ல மனிதரை,அறியாமல்,மடைத்தனமாக நடந்துவிட்டேன்.இப்போது உங்க ளுடன் பேசவே கூச்சமாக உள்ளது. '

'இப்போது தவறை மானசீகமாக உணர்ந்து விட்டீர்கள் தானே!இதுவே பெருந்தன்மை!பெருந்தன்மை மனித னுக்கு வரும்போது,மன்னிப்பும் கூட வே கிடைத்துவிடுகிறது.பழையன மறப்போம்.எனக்கு சிறிதும் கோபம் இல்லை! ' என்றேன்.

பின்பு மதன் அடிக்கடி தொலைபேசி யில் அன்பாக குசலம் விசாரிப்பார். சமய சம்பந்தமான விசாரணைகள் கூட உரையாடுவார்.

மதன் ஒரு சிறந்த கிறிஸ்தவர்;காங் கேசந்துறையைச்சேர்ந்தவர்.கிறிஸ்த வத்தின் முற்போக்குக்கொள்கைக ளை ஆதரிப்பவர்.அர்த்தமற்ற சடங்கு களை தீவிரமாகஎதிர்ப்பவர்.பைபிளில் கூறப்பட்டுள்ள வசனங்களுக்கு மெய் ப்பொருள் கண்டுணரும் ஒரு ஆர்வ லர்!ஆனால் பிறசமயங்களை இகழ்ச் சியாகக் கருதுபவர் போலும்.இந்தும தத்தைச்சார்ந்த என்னுடன் ஆன்மீக ம் பற்றி சில ஐயங்களை எழுப்பி,அத ற்கு அவர் எதிர்பார்த்த பதிலை மன தில்வைத்துக்கொண்டு ஏளனம் செய் துவிடும் நோக்குடன்,சிலசமயம் அணுகுவதுண்டு.எனது பதில் அவ்வி தமாக அவர் நடந்துகொள்ள இடமளி க்கவில்லை.

காலையில் கடமைக்கு புறப்படமுன் உயர்அதிகாரியின் வீட்டுக்குத்தொட ர்புகொண்டு,வசந்தாவின் நிலையை விளக்கி,முன்பு இருந்த இடத்தில் பாதிப்பு இல்லை எனக்கூறி,அவர் விருப்பப்படி அங்கே போய் இருக்க அனுமதிக்கும்படி வேண்டிக்கொண் டேன். குழந்தையோடும்,உடுப்பு முத லிய உடைமைகளோடும்,பொதுபய ணசாதனங்கள் மூலம் பயணம் செய் வது சாத்தியமில்லை என்பதால் தூதரகமோட்டார் வண்டியை அனுப் பி உதவும்படி கோரிக்கையும் விடுத் தேன்.அவரும் அவ்வாறு செய்ய உடன் அனுமதியளித்தார்.

அதன்படி மோட்டார்வான் மூலம் தூதரகத்திற்கு அவர்களை அழைத் துச்சென்று,அங்கிருந்தபடியே தொழி ல்முகவரை வந்து கூட்டிச்செல்லுமா று பணிப்பும் விடுத்தோம்.தொழில்மு கவர் சுரேனும்,உதவியாளர் மதனும் வந்திறங்கினர்.விடயத்தை விளக்கி கூடிய விரைவில் வசந்தாவையும்,குழ ந்தையையும்,தாய்நாட்டுக்கு திருப்பி அனுப்ப ஏற்றஒழுங்குகளைச் செய்யு மாறும் கடுமையாகக்கேட்டுக்கொ ண்டோம்.முகவர், இன்னும் 2 வாரத்தி ல் சுவிற்சலாந்து அனுப்பிவைக்கப்ப டுவர்! என ஆசைகாட்டியபோதிலும், அதற்கு இடம்கொடுத்து ஏமாறாது, தாய்நாடு செல்லும் வழியை பார்க்கு மாறும் ஆலோசனை கூறினோம்.

அதுமட்டுமன்றி இதுதொடர்பாக ஒரு ஒப்பந்தத்தையும் எழுத்துமூலம், முகவரிடமிருந்து பெற்றுக்கொண் டோம்.வசந்தாவும் பிள்ளையும்,அவர்க ளுடன் சேர்ந்து முகவர்விடுதியை அடைந்தனர்.

முகவரோ செவிடன்காதில் ஊதியசங் காக அதனை அலட்சியம் செய்துவி ட்டார்.இரண்டுவாரங்கள் கடந்தும் வசந்தா எங்கும் போகவில்லை.சுவிற் சலாந்திலிருக்கும் அவரது கணவன் செல்வராசா விபரமறிந்து இதுபற்றி என்னுடன் தொடர்புகொண்டார். அதன்பிறகு அடிக்கடி அவரது தொ லைபேசி அழைப்பு வந்துகொண்டிரு ந்தது.இறுதியாக அவரே பணமுதலீ டு செய்து விமானச்சீட்டு இலங்கை யில் வாங்கி வசந்தாவுக்கு அனுப்பி பின்னர் அவர் நாடு திரும்பியதாகக் கேள்விப்பட்டேன்.

இந்நிகழ்ச்சியின் பின் மதன் மிகுந்த மரியாதையுடனும்,அந்நியோன்னிய மாயும் தொலைபேசி மூலம் பழகிவந் தார்.சிலமாதங்களின் முன்பு மீண்டு ம் ஒருநாள் இவ்வாறான கடமையின் நிமித்தம் பொலிஸ்நிலையத்தில் மதனை எதிர்பார்க்காமல் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது.இதன் விபரத்தைப் பின்புவரும் மரியசீலன்பற்றிய தொகு ப்பில் வாசகர்கள் அறியலாம்.

## ஜெபராஜசிங்கத்தின் மரணம்!

ஒரு காலைநேரம்!சுமார் 10 மணி இருக்கலாம்.சராசரி உடலமைப்பும்,க ம்பீரமான பார்வையும் கொண்ட சுமார் 35 வயது மதிக்கத்தக்க இளை ஞர் ஒருவர் தூதரகவாசலில்! பெயர் செல்லத்துரை எனப்படும்,ஜெ பராஜசிங்கம்!இடம் யாழ்ப்பாணத்துக் கொக்குவில்!தனது முறைப்பாட்டை க்கூறினார்.

2வாரங்கட்கு முன் மத்தியகிழக்கில் இருந்து தொழில்முகவர் மூலம்,ஜேர் மனி போகப்பணம் கொடுத்து, மாஸ் கோ கொண்டுவரப்பட்டதாயும்;நடப்பு நிலையைப் பார்க்கும்போது,எந்தநா ட்டுக்கும் போகும்சாத்தியம் இல்லை என்றும் கருதி;இலங்கை திரும்பும் எண்ணத்தை முகவரிடம் கூறினார். அவர் சாட்டுப்போக்குகள் கூறி தட்டி க்கழித்து வந்தார் என்றும்,தொடர் ந்து தான் அவரைக் கரைச்சல்படு த்தியதால்,ஆத்திரமுற்ற முகவர், 2 தரம் நையப்புடைத்து விட்டதாகவும் தொடர்ந்து அங்கு தங்கினால் தன் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்றும் எண்ணி பொலிசில் சென்று சரண டைந்ததாயும் கூறினார்.

இரவுமுழுதும் பொலிஸ்நிலையத்தில் தங்கியிருந்த அவரை காலையில் ஜீப் வண்டியில் ஏற்றி வந்து இலங்கைத் தூதரகத்தின் முன்னால் இறக்கிவிட் டுவிட்டு சென்றுவிட்டனர்.இப்போது தனக்குத்தங்கி இருக்க;சீவிக்க எதற் கும் வழியில்லாததால் இலங்கைக்கு திரும்பிப்போகும் வரை,உண்டி,உறை விடம் அளித்து காப்பாற்றும்படியும் தயவாக வேண்டினார் ! (வளரும்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குறிப்பு:ஆடி,ஆவணி ,95 இதழ்கள் ஆவணிக்கடைசியில் ஒன்றாக வெளிவரும்!

## சம உரிமை

திருச்செல்வம் திலீபன் / ஒஸ்லோ

மனைவி மைதிலியைக் காணவில்லை!எங்கே அதிகாலையில் போய் இருப்பாள்? யாருடனோ ஓட்டம் பிடித்து விட்டாளோ! சீ! சீ!! அப்படி நினைக்கக்கூடாது! ஏதாவது அலுவலாக வெளியே போய் இருப்பாள்!

அது ஒரு சனிக்கிழமை.காலம்பூரா கண்டம்,கண்டமாக உலகைச்சுற்றி வரும் சூரியனும் அன்று ' லேற் '! ரகுவும் அதனால் எழும்ப 'லேற் '! கண்ணைக்கசக்கியபடி,சிவந்த கண்களுடன் புறப்பட்ட கதிரவனுக்கு ரகுவைக் காண பொறாமை போலும்! அல்லது இரக்கம் போலும் !! தன் சூடான கதிர்க்கரத்தால், 'எழும்படா!எழும்பு!! மனிசி எங்கையெண்டு தேடு! என்பது போல எழுப்பினான். கடிகாரத்தை முறைத்துப்பார்த்தான். சூரியனின் கோபத்தை வேறு யாரில் காட்டுவது?

'மைதிலி!மைதிலி!! 'என கட்டிலில் படுத்திருந்தபடியே குரல்கொடுத்தான்.பதில் எதுவுமே வரக்காணோம்! விடியற்காலையிலே இவள் எங்கே தான் போயிருப்பாள்? பெண்விடுதலை;சமஉரிமை என்று எங்கையாவது;யாரோடாவது அலட்டிக்கொண்டிருப்பாள்.சரி!சரி!!அவளின் உரிமையிலே நான் ஏன் தலையிடுவான்!இப்பிடி ஆட்களும் இருந்தால் தானே நம்ம சமுதாயம் முன்னேறும்! அடுப்படிப்பெண்கள் மாதிரியில்லாமல் சுதந்திரமாய் என்ரை மனிசியை உலாவவிட்டிருக்கிறன்.எனப்பெருமிதப்பட்ட ரகு கட்டிலை விட்டுத் துள்ளி எழுந்தான்.

எழுந்து முகம்கழுவி குசினிக்குப்போனதும் 'காய்ந்தபாண்'ஒன்று கண்ணடித்தது!அலுப்பும் சலிப்பும் மேலிட பாணைக் கடித்தபடி யன்னலூடாக வெளியே நோக்கினான். கோர்த்த கைகளை கழட்டமுடியாமலும்,அணைத்த கைகளைப்பிரிக்க முடியாமலும், வீதியில் தவிக்கும் நோர்வேஜிய ஆண்கள்!இந்த நோர்வேஜியப்பெண்களுக்கு இவ்வளவு காந்த சக்தியா?அல்லது கையைவிட்டால் பறந்துவிடுவர்!என்ற பயமா? ஒருவர்வாயினுள் எதையோ தொலைத்துவிட்டு,மற்றவர் அமளியாக வாயினால் தேடுவதுபோல் முத்தமழைகள்! இவை ரகுவின் உணர்ச்சிகளைக்கிளறியபோதும்,மனைவி இல்லாததால் கவலை கொண்டு தனக்குச் சமாதானமும் கூறிக்கொண்டான்.

பெண்களின் சமஉரிமைக்குப் போராடும் மனைவிக்காக சிலவிடயங்களை இழந்தால் தான் என்ன! பேச்சு,நாடகம்,பட்டிமன்றம் என மனைவி முழங்கும்போது முன்வரிசையில் அமர்ந்து கைதட்டுவதில் அவனுக்கு ஒரு அளவிடமுடியாத பேரின்பம்!அந்தப்பேரின்பத்துக்காக இந்தச்சிற்றின்பத்தை இழந்தால் தான் என்ன!!

பெரியவீட்டில் தனியாக இருக்கப் பிடிக்காத ரகு, அருமை நண்பன் சங்கரைப் பார்க்கப் புறப்பட்டான்.சங்கருக்கும் பெண்விடுதலை,சமஉரிமை என்றால் நல்ல ஈடுபாடு!

அவனுக்கு அத்தகைய புரட்சிகரமான கருத்துகளால் சிந்தனாவாதி, முற்போக்குவாதி என நல்லபெயரும் உண்டு.அத்துடன் ரகுவின் உற்ற நண்பனாகவும்,உதவிசெய்பவனாகவும் கூட இருந்தான்.

சிங்கப்பூர் சென்று தான் விரும்பிய யாழ்ப்பாணபெண்ணை, கலியாணம் செய்து அவள் இன்னும் 10 நாளில் இங்கு வரஇருக்கிறாள்.அவன் சீதனம் வேண்டாம்!என்று சொல்ல மாமன், மாமி தான்,'எங்களிட்டை உள்ள பணம், பண்டத்தை என்ன தெருவிலயா எறியுறது?இவ்வளவு காலமும் பாடுபட்டுச்சேமித்த பணம்! 'என்று தங்கள் ஒரே மகளுக்குக்கொடுத்தனர். சமயச்சடங்கும் வேண்டாம்!என்று சங்கர் சொல்ல அது தமக்கு முக்கியம்,என்றும்சொல்லி அவர்கள் விருப்பப்படியே நடந்தது.நம்ம சமுதாயத்தில எதுதான் அவரவர் விருப்பப்படி நடக்குது? வசதியற்ற பெற்றோர் ,வசதியாக ஆண்பிள்ளைகளில் பாரம் ஏற்றி விடுகிறார்கள்.வசதியுள்ள பெற்றோர்க்கு சீதனம் ஒரு பிரச்சனையே அல்ல! இவை எல்லாம் சிந்தனையில் தெறிக்க,சங்கரின் வீடுநோக்கி நடந்தான். கதவு திறந்திருந்தது!யாரையும் காணவில்லை!இவன் எங்கே போயிருப்பான்?நித்திரையால எழும்பவில்லையோ?அல்லது பக்கத்துக்கடைக்குப் பால் வாங்கப் போயிருப்பானோ? இதனை எண்ணியபடி அவன் கால்கள் வீட்டினுள் புகுந்தன.குசினிக்குள் எட்டிப்பார்த்தான். யாரும் இல்லை! படுக்கையறையில் இன்னும் நித்திரையாய் இருப்பானோ?சரிபார்ப்போம்.கால்கள் அறைநோக்கிநகர்ந்தன! ஏதோ ஒரு முனகல்சத்தம்!பின் சிரிப்பு ஒரு ஆளில்லை! இருவர்!! மற்றது பெண்குரல்!சங்கரின் மனைவி இலங்கையிலிருந்து வந்துவிட்டாளோ?சரி அவர்களை குழப்பக்கூடாது!போவம் 'டாலிங்!அன்பே!! என்று வேறு சத்தங்கள்.திரும்பி நடக்க முயன்றவனை, உள்ளுணர்வு நிறுத்தியது!

'நில்! குரலைக்கவனி !!மடையன் மாதிரித் திரும்பிப் போகாதை !! யார் என்று வடிவாக உற்றுக் கேள்! ' 'சரி! உள்ளுணர்வே!உன் சொல் தான் உண்மையை மனிதர்க்கு காட்டும். உன் கணக்கு அனேகமாகத் தப்புவதில்லை!! சரி!அப்படியே ஆகுக! என்றபடி கதவு நீக்கல் ஊடாக உற்று நோக்கியவனுக்கு,தலையில் இடி விழுந்தது போல் இருந்தது.உலகம் சுழன்று விழுவது போல் ஒரு மலைப்பு;பின் ஒரு திகைப்பு!உடலிலுள்ள இரத்தம் எல்லாம் பீறிட்டு அப்படியே தலைவழியே வருவதுபோல் ஒரு உதைப்பு! அட !அது .........! ......மைதிலியா? படார்! எனக்கதவைத் திறந்தவன், யானையின் பலத்துடன் சங்கரைப் புலி போல் பாய்ந்து பற்றி சுவரில் மாறி ,மாறி அறைந்தான்.

எதற்கும் கலங்காதவளாக ஒரு புது மைதிலி அவளிலிருந்து புறப்பட்டாள்.அவள் இப்படிக் கதைத்ததை ஒருபோதும் அவன் கண்டதில்லை. 'ஏன் அவரை அடிக்கிறீர்கள்?என்விருப்பத்தோட தான் நடந்தது! இங்கு யாரும்,யாரையும் அடிக்க 'லோ' இல்லை!விவாகரத்து எடுக்க யாருக்கும் 'லோ' இருக்கு!! இங்கை பெண்களுக்குப் பூரண சுதந்திரமும்,பாதுகாப்பும் இருக்கு!இது ஊரில்லை! யாரும் தன்விருப்பப்படி நடக்கலாம்! ரகு திகைத்துப்போனான்.எங்கையிருந்து இந்தப்பிசாசுக்கதை வந்தது? 'எடியேய் வடிவாக்கேள்!என்னவும் செய்யலாம் எண்டால் கொலையும் செய்யலாம் எண்டு அர்த்தமில்லை. நோர்வேஜியரின் குடும்ப வாழ்விலும் ஒரு அடிப்படை ஒழுக்கம் இருக்கு! சமஉரிமை,பெண்விடுதலை என்பது ஒழுக்கம்,ஒழுங்கு கெட்டலையிறது இல்லையடி!ஒழுங்கான குடும்பவாழ்வுதான் நல்ல பிள்ளையள்,சமுதாயத்தை உருவாக்கும்!கட்டாக்காலியாத் திரியிறது விடுதலை இல்லேடி!! உங்களை மாதிரி நாலுபேர் வழிநடத்த புறப்பட்டதாலதான்,பெண்களுக்கு சுதந்திரம் தரப் பலர் பயப்பிடுறாங்கள்! சுதந்திரமும்,ஒழுக்கமும் இருகண்கள்! ',என்றவன்,வேகமாகவெளியேறினான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பனிப்பூக்கள்.

காரையூரான்

"அப்ப எதுக்கடி நேற்று பொய் சொன்னா?"
" ம்........ம்........அது வந்தப்பா..."
"அவளுக்காக நீ என்னிட்ட பொய் சொல்லி இருக்கா? நீ வயதுக்கு மூத்தனி. உனக்கு இப்ப உலகம் விழங்கும் . அப்பிடி இருந்தும் ஏன்டி இப்பிடிச் செய்தாய்? உனக்கு இது தப்பா படவில்லையா?"
"தப்புத்தான் அப்பா!"

இவ்வளவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த கௌ ரிக்கு இவர்கள் என்ன கதைக்கிறார்கள் என்பதே புரியவில்லை. இதற்கிடையில் வேந்தன்,
" சரி சியாமிழி, கௌ ரிய கூட்டிக் கொண்டே பாடம் சொல்லிக்கொடு."
" சரியப்பா."
கூறிவிட்டு, அனுவைப் பரிதாபமாய்ப் பார்த்தவண்ணம் தன் அறையை நோக்கிச் செல்ல, அவளைக் கௌ ரி பின் தொடர்ந்தாள்.

அனுவுக்கு தான் விளக்கமறியலில் இருக்கும் குற்றவாளி போன்றும், தந்தை எதிர்தரப்பு வக்கீல் போலவும் தோன்றியது. அவள்மனதில் நான் என்ன தப்புச் செய்து குற்றவாளியானேன்? காதலித்தது குற்றமா? அப்பா அதைகுற்றமாக எண்ணுகிறாரா? உண்மையில் காதலிப்பது தவறான ஒன்றா? இல்லை ஒருபோதும் காதல் குற்றமாகாது. குலம்கோத்திரம் மாறி நிறம்மாறி, ஒரு வெள்ளையனைக் காதலிப்பதுதான் குற்றமா? காதல் என்ன குலம் கோத்திரம் பார்த்தா வரும்? எது குற்றம்? எதற்காக அப்பா என்னத் தனிமையில் வைத்து விசாரிக்கப் போகின்றார்? எல்லோரும் அனுபவிக்கும் சுதந்திரத்தை ஏன் எனக்கு தருவதில் இவ்வளவு தடங்கல்கள்?
" அனு? "
" ம்........................"
" நேற்று எங்க போனனீ?"
அனு பொய் சொல்ல விரும்பவும் இல்லை. அதற்கு இது சந்தர்ப்பமு மில்லை என்பதால் நேரடியாகவே வி டயத்திற்கு வந்தாள்.
"ஸ்தீக் வீட்ட."
" எதுக்கு? "
"வீட்டவரச் சொல்லிக் கூப்பிட்டான் அதுதான் போனனான்."
" பிறகு?"
"சாப்பிட்டிட்டு கதைச்சுக்கொண்டு இருந்திட்டு வந்தனான்."
" எவ்வளவு நாளா அவனோட இந்தப் பழக்கம்? "
"இஞ்ச வந்த நாள் தொடக்கம். "
" என்ன?"
" என்னப்பா ஆச்சரியப்பர்றியள்? அவன் என் ர கிளாஸ்மேட், அதனால அவனோட பழக்கம். இதில என்ன இருக்கப்பா இப்பிடி நோண்டி நோண்டி விசாரிக்க? "
" ச்.......இதுக்கு முதலும் அவன்ர வீட்டுக்கு போயிருக்கிறியோ? "
" இல்ல. "
"அப்பேன் நேற்றுமட்டும் அங்க போனாய்?"
"கூப்பிட்டான். வீட்டவரச் சொல்லி கூப்பிட்டான். அதோட அவன்ர தாய் எனக்காக சமைச்சு வைச்சிருக்கிறதெண்டும், கட்டாயமா வந்து சாப்பிடோணும் எண்டும், கூப்பிட்டான். அதுதான்........"
"யார் கூப்பிட்டாலும் இளிச்சுக் கொண்டுபோய் கண்ட இடத்தில எல்லாம் சாப்பிடுவியோ?"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பனிப்பூக்கள்.

காரையூரான்

"அப்பா!?...."
"என்னடி கத்துறா?"
வேந்தன் சற்று எரிச்சலோடும் கோபத்தோடும் நோக்கினான்.

இப்படி வேந்தன் எரிந்து விழுந்தது அனுவுக்கு பெரிய சங்கடத்தை உண்டுபண்ணியது. என்ன சொல்லலாம் அப்பா இப்படிக் கேட்கிறாரே? உண்மையைச் சொல்லிவிடவா? சொன்னால் என்ன என்கின்ற ஒரு துணிச்சல் அவளுள் எட்டிப் பார்த்தது. இந்த துணிவிற்கு இரண்டுவருடம் நோர்வேயில் படித்ததும் பழகியதும் காரணமாக இருக்கலாம். அவளது எண்ணம் கலைந்து பறந்தது.
"என்ன பேசாம நிக்கிறாய்?"
"நீங்க நினைக்கிறமாதிரியில்ல அப்பா. எனக்கு அவனை நல்ல பழக்கம். அதோட அவன் நல்லவன். எனக்கு அவன பிடிக்கும். அதால கூப்பிட்டான், போனேன்!"
"உனக்கு மட்டும்தான் அவனைப் பிடிக்குமோ, இல்லாட்டி அவனுக்கும் பிடிக்குமோ?"

அப்பாவின் இடக்கான கேள்வி மீண்டும் கோபக் கணைகளை எழச்செய்தாலும் அதை புறக்கணித்துவிட்டு அமைதியாக பதில் கூறினாள்.
"அவனுக்கும் பிடிக்கும்."
"காதலா....?"

---

"அனு நடந்ததையெல்லாம் இதோட மறந்திட்டு, நான் சொல்லுறத கவனமாக் கேள். நீ நல்லபிள்ளை, அதாலதான் நான் இவ்வளவு பொறுமையா உனக்கு சொல்லுறன். அனு இந்த காதல் விடயமெல்லாம் எங்கட குடும்பத்துக்கு சரிவராது. ஊரில உங்க அக்கா முறை மாப்பிள்ளைய காதலிச்சதுக்கே நாங்க எப்பிடி நடந்தம் எண்டது உனக்கு புரியும். ஆனா நாங்க இப்ப அப்பிடி இல்ல. இப்ப நீ அப்பிடி ஒரு முறையோடு காதலிச்சிஎண்டாலும் நாங்க அதை ஏத்துக்கலாம். ஆனா நீ.................. இது சரிவராதம்மா. எந்தவிதத்திலையும் பொருந்தாத ஒண்டுக்கு ஆசைப்பர்றியே? பிரச்சனையில்லைஎண்டா நாங்களே முன்னுக்குநிண்டு இதை செய்து வைக்க மாட்டமோ? இப்பகூட உங்களப் பிரிக்கோணும் எண்டது என்னுடைய நோக்கமில்ல. நாங்க ஒத்துக் கொண்டு இதை செய்து வைக்கலாம். ஆனா நாளைக்கு உன்ர அக்காக்கு, தங்கச்சிக்கு, மாப்பிளை தேடிப்போன மூஞ்சையில காறித்துப்பி அனுப்பிடுவாங்கம்மா. அப்படி ஒரு அவமானம் வந்தா அதுக்குப்பிறகு உயிரோட இருக்க எங்களால ஏலாது. தற்கொலை செய்யிறதைவிட வேற வழிதெரியிறதா தெரியல்ல. அதோட உன்னால இப்ப இவங்களைப்பற்றி நல்லா புரிஞ்சுக்க ஏலாது. அதுக்கு வயது உனக்கு போதாது."

---

---

"இவங்கள் ஒரு பெண்ணோட வாழமாட்டாங்கள் தெரியுமோ? முதல்ல சத்தியம் செய்தாலும் ஒரு இரண்டு வருசத்தில தங்கட குணத்தக் காட்டிடுவாங்க. அதுதான் நாங்க ஆழமறிஞ்சு காலவிடனும் எண்டிறது. ஒவ்வொருத்தரையும் பெத்து வளக்க எவ்வளவு பாடுபடனும் எண்டது அனுபவிச்சாத்தான் தெரியும். அப்பிடி வளத்த பிள்ளைகள் நல்லா இருக்கோணும் எண்டு எங்கட மனசில ஆசை இருக்காதோ? நீ நாளைக்கு கஸ்ரப்பட்டா எங்கட மனசு தாங்குமா அனு? உன்ர ஆசைக்கு தடைபோடுறதில எனக்கும் விருப்பமில்லத்தான். ஆனா நீ நினைக்கிறது ஆபத்தான ஆசையம்மா? நெருப்பில சூடுகாயிறத்துக்கு விடலாம்!, ஆனா உள்ள புகுந்து பாக்கோணும் எண்டா எப்பிடி விர்றது? அந்த நிலைதானம்மா எங்களுக்கும். ஆபத்தெண்டு தெரிஞ்சு கொண்டே எப்பிடியம்மா நாங்க சும்மா இருக்கிறது? (வளரும்...)

www.tamilarangam.net

ISSN:0805-7443 SARVADESA TAMILER Vol.2;Nr.6;June 1995

BLAD

சர்வதேசதமிழர்

Editor:N.S.Pirabu,B.Sc.,Dip.Journalism(U.K.)
L.Hervigs vn.69A,3035 Drammen,Norway.
Tl./Fx.32.813416;E.mail:nsp@oslonett.no

Subscription/yr: Scandinavia:180,-NKr;Srilanka/India:12USD;U.K.:12£;France:60Fr;Germany:24DM;Canada:18CD;Swiss:24Fr;Austrlia:24AD;K.S.A.:36SR;Singapore/Malaysia:24SD;Others:20USD

Postgiro:0823 0899 453 Bankgiro:6066 1012 199

## புதியதோர் உலகம் செய்வோம் !

பிறக்கப்போகும் 21ம் நூற்றாண்டின் இளவேனிற்காலம் எனகட்டியம் கூறும் இந்த 20ம் நூற்றாண்டின் காலகட்டம்வரை தமிழர்கள் தம்சிந்தனையில் தம்தெளிந்த எதிர்காலம் பற்றி ஆராய்ந்திருக்கிறார்களா?என்றால் அது இல்லை!என்று தான் பதில்கிட்டும்.ஆராய்ச்சிநடந்துகொண்டுதான் இருக்கிறது.பழையசிந்தனை,பழைய சரித்திரம்,பழையபோதனை,பழையசாதனை என்பவற்றால் நாம்பெறக்கூடியவை அவலங்களும்,சோதனைகளுமே!இதனை விடுத்து நவீனஉலகின் காலநீரோட்டத்தில் கலந்துகொண்டு,எம் எதிர்காலமுன்னேற்றம் குறித்த,பயன்வாய்ந்த சிந்தனைக்கருவூலங்களே எமது இன்றைய தேவை!

அவற்றிற்கு எல்லாம் மகுடம் வைத்தாற்போல்,அமைந்த அடிப்படைத்தேவையே எமது 'சொந்தநிலம் 'எனும் அடிப்படை எதிர்பார்ப்பு!கூட்டுமுயற்சி தான் இங்கு அதிக நன்மை பெற்றுத் தரவல்லது.

உலகம் முழுவதும் இன்று பரந்து,சிதறி வாழும் எம்தமிழினம்,இன்னும் 50 வருடங்களில் எப்படி தம்மொழி,வாழ்க்கைமுறை,கலாசாரம் என்பவற்றைப் பேணிப்பாதுகாத்து வரப்போகிறதென்பதைக் கணிப்பது இலகுவல்ல! சூழல்,நிர்ப்பந்தங்கள்,மாறிவரும் உலக நடைமுறைகள்,என்ற இன்னோரன்ன பிறகாரணிகளால் தமிழர்கள் சந்ததி முற்றாகவே மாறிவிடச்சந்தர்ப்பம் உண்டு.இந்நிலையில் தமிழர் பாரம்பரியகலாசாரம்,பண்புகள்,சமுக உறவுகள் தொடர்ந்து நீடித்து இருக்க வேண்டுமாயின் தமிழர் தாயகம் அமைவது மறுக்கமுடியாத காலத்தேவையே!இது ஒரு பக்கம் சாரா,அரசியல் கலப்பற்ற,தமிழர் எதிர்காலநலன் நோக்கிய யதார்த்த பூர்வமான சிந்தனை மட்டுமல்ல;தூரதிருஷ்டி வாய்ந்த சிந்தனையும் கூட!

தாயகம் என்ற கோட்பாடு ஒருமாநிலமாகவோ,மாகாணமாகவோ,இறைமை கொண்ட நாடொன்றின் ஒரு பகுதியாகவோ அமைவதென்பது, இதன் பொருளல்ல!அது எங்கே,எப்படி,எவ்வாறு அமைவுறவேண்டும் என்பது கூட இதன் பொருளல்ல!

உலகின் எந்த ஒரு மூலையில் அமைந்தாலும் முழுச்சுதந்திரமும்,தன்னாதிக்கமும் கொண்ட தனித்தமிழ்நாடாக அது விளங்கவேண்டும்!

அளவில்சிறியதாக இருப்பினும்,நாடு என்ற சகல அந்தஸ்துகளுடன் அது திகழவேண்டும்!

சொல்லுதல் யார்க்கும் எளிதே!சொல்லியாங்கு செயலாற்றுதல் எங்ஙனம்? என்ற கேள்வி எழுகிறதே! முயற்சி மெய்வருந்தக்கூலி தரும்! முயற்சி உடையார் இகழ்ச்சியடையார்!எனும் அறிவுரைகள் உற்சாகம் தருபவை.

எம்மிடையே கட்சிஅரசியல் என்ற வேறுபாடு,தேசம் என்ற வரையறை, எண்ணங்கள் தோன்றிடினும்,தமிழர் எதிர்காலம் என்ற குறிக்கோள் சகல தமிழருக்கும் ஒன்றாகவே இருக்கிறது.ஆகவே உலகத்தமிழர்கள் அவர்கள் சார்ந்துள்ள நியதியில் உள்ள பிரச்சனைகளோடு,இம்முக்கியபிரச்சனையையும் சிந்தனையில் நிறுத்திஆராயவேண்டியதும் முக்கியமாகிறது.

இலங்கையில் இன்று தமிழர்கள் இதே நோக்கத்துடன் போர்புரிந்து வந்தாலும்,வன்முறையை ஏற்கப் பலர் மறுத்துவருகின்றனர்.

இந்தியாவிலே தமிழ்நாடுமாநிலத்தின் அதிகபட்சநியாயமான கோரிக்கைகள் கூட,மதிக்கப்படாமல் நிராகரிக்கப்படுகின்றன.ஏனையநாடுகளில் வாழும் தமிழர்கள் அந்தந்த நாடுகளில் வெவ்வேறு பிரச்சனைகளை எதிர்கொள்கின்றனர்.மேற்குநாடுகட்குச் சென்று குடியேறிய தமிழர்கள் கூட இன்று தம்நிலை மறந்து களிப்புற்றிருந்தாலும்,எதிர்காலம் பற்றிய ஏக்கப் பெருமூச்சுடன் வாழ்ந்துவருகின்றனர் ஒரு நிச்சயமற்ற வாழ்வுநிலையே,20ம் நூற்றாண்டின் இறுதிப்பகுதிவரை நிகழ்ந்துவந்துள்ள சம்பவங்கள்!

உலகிலே எந்த ஒரு பாரம்பரியம்,கலாசாரம்,நாகரிகம் மிக்க சமுதாயமும், இன்று நாடற்ற பிரஜைகளாக வாழ்ந்து வரவில்லை.முன்பு சிதறி வாழ்ந்த யூதர்கள் கூட, தமக்கென ஒரு தனி நிலம் தேவை என உணர்ந்து,பாலைவனப்பிரதேசத்தில் இஸ்ரேல் என்று ஒரு இராச்சியத்தை அமைத்தனர்.

நாடின்றி தவிக்கும் இனங்களில் எம் இனமே இன்று மிகத்தவிக்கும் இனமாகும்.இவ்வினத்தின் விடிவு நீதியாக அமையவேண்டின்,உரிமைகோரிப்பெறவேண்டிய முதல்தேவை 'தமிழ்நிலம்' என்ற ஒரு நிலப்பரப்பே! பனிமனிதர்கள் என வர்ணிக்கப்படும்,துருவமக்கள் கூட தமக்கெனஉள்ள நிலப்பரப்பைப் பாதுகாப்பதில்,மிகக்கவனமாக உள்ளனர்.எமது அக்கறையற்ற ஏனோ தானோ!நிலை தொடர்ந்தால்;இராமன் ஆண்டாலென்ன,இராவணன் ஆண்டாலென்ன நிலை தொடர்ந்தால், தமிழ்,தமிழர் மறைந்து, 'சர்வதேச நாடோடிகள் கூட்டம்', எனும் பெயர் வர நிறையவே வாய்ப்புண்டு.

தென்;கிழக்குஆபிரிக்கா,பிஜி,செனகல்,மடகாஸ்கர்,மொறிசியஸ் ஆகிய நாடுகளில் காணப்படும் யதார்த்த நிலை,இதனை வலியுறுத்துவதாகவே அமைகிறது.

தனிமனிதனின் விவகாரத்தில் கூட, தங்கஇடமில்லாத ஒருவனை சமுதாயம் ஏற்றுமதிப்பதில்லை!அவர் சந்ததியும் அவமதிப்பு,ஏளனம்,சீரழிவுக்கு உள்ளாகும்.இவை நாம்காணும் அனுபவக்காட்சிகள்!

'புத்திமான் பலவான்'என்பதை காலத்தால் உணரத்தவறிய தனிமனிதனோ சமுதாயமோ,இனமோ பின்னர் வருந்தவேண்டியது நியதியே!புத்தியை உரிய நேரத்தில்,உரியஇடத்தில் சரியாகப் பாவிப்பது மிக முக்கியம்!

இந்த இலக்கினை அடைய சீரான, நேரான உபாயம் வகுத்து,பாடுபட்டு உழைக்க விரையுங்கள்,தமிழர்காள்!!

கே.எஸ்.ஆர்..................மட்டக்களப்பு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்